www.ekuruvi.com
ஈகுருவி

சிறகு - 01 15.07.2012 பறப்பு -02



அறிவுப் பசி தீர்க்கும் வன்னிமண்



"உங்கள் வயிற்றுப் பசியை ஆற்றும் போது தாயகத்திலுள்ள மாணவன் ஒருவனின் அறிவுப் பசி தீரும்"

நட்சத்திர விழாவில் வன்னிச் சங்கத்தின் உணவுவிடுதி

யூலை 14, 15 ஆம் திகதிகளில் கனடியத் தமிழ் வானொலி வழங்கும் நட்சத்திர விழாவில் வன்னிச் சங்கம் உணவுச்சாலை ஒன்றினை அமைக்கின்றது. விழாவைக் காண வருபர்களின் பசியினை போக்கு முகமாக அமைக்கப்படுகின்ற இந்த உணவுவிடுதியில் "உங்கள் வயிற்றுப் பசியை ஆற்றும் போது தாயகத்திலுள்ள மாணவன் ஒருவனின் வயிற்றுப் பசி தீர்க்கப்படும்".

இந்த உணவுச்சாலை மூலம் கிடைக்கும் நிதி அனைத்தும் ஈழத்தில் போரினால் பாதிக்கப்பட்ட கல்வியைத் தொடர முடியாத மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்றலை மேற்கொள்ள பயன்படுத்தப்படும்.

கனடாவில் கடந்த 13 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் (வன்னிச் சங்கம்) போரின் போதும் போரின் பின்னரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் எதுவித உதவியையும் பெறாத பாதிக்கப்பட்ட அடித்தள மக்களைத் தேடிச்சென்று அவர்களுக்கு உதவி செய்து வருகின்றது. அமையத்தினால் "இசையும் உதவும் திசையும்" நிகழ்ச்சி உட்பட பல வர்த்தக பிரமுகர்கள், பொதுமக்களிடம் திரட்டப்பட்ட நிதி முழுவதும் உடல் உறுப்புக்களை இழந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கும், உறுப்புக்களை இழந்த குடும்பத்தலைவர்களைக் கொண்ட அல்லது கணவனை இழந்த அல்லது பெற்றோரை இழந்த குடும்பங்களுக்குக்கான வருமானம் தரக் கூடிய சிறு சுயதொழில் உருவாக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்ட குடுப்பங்களில் உள்ள பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு கணினிக் கல்வியறிவைக் கொடுப்பதற்காக இலவசக் கணினிக் கல்லூரிகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அமையத்தின் மூலம் தெரிவுசெய்யபட்ட பலருக்கு கனடாவிலுள்ள பலர் நேரடியாக இன்றும் உதவிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது



சிங்களப் பேரினவாதிகளால் தமிழர்கள் படுகொலை கனடிய தமிழ் இளையோர்களும் அறியச் செய்வோம்

- கருப்பு யூலையில் ராதிகா சூளுரை -

சிங்களப் பேரினவாதிகளால் 29 ஆண்டுகளுக்கு முன்னர் யூலை மாதத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை உயிருடன் தீ மூட்டியும் வெட்டியும் சுட்டும் துடி, துடிக்கப் படுகொலை செய்த கோரச் சம்பவங்களை விளக்கும் கருப்பு யூலை ஆண்டுதோறும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமுதாய மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் கருப்பு யூலை தினத்தை முன்னிட்டு என்.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

29 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் கோரத் தாக்குதலுக்கு ஆளானதை நினைவு கூறும் இந்நாளில் தமிழனத்தின் வருங்காலத் தூண்களாகிய கனடிய தமிழ் இளையோருக்கும் மற்றும் உலகமெங்கும் வாழும் நம் மக்களுக்கும் இது குறித்து போதிக்க வேண்டும் என அவர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1983 ல் நடைபெற்ற படுகொலைகளை கண்டிக்கும் அதே வேளையில் , 30 ஆண்டுகாலப் போர் முடிவடைந்த தருணத்தில் ஈழத் தமிழர்கள் அடைந்த சித்திரவதைகளையும் எண்ணிப் பார்ப்பதோடு , சிறிலங்காவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் மக்களுக்கு வளமான எதிர்காலத்தினை உருவாக்கிக் கொடுக்கவும் சூளுரை ஏற்போம் என அறிக்கையில் மூலம் உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

தமிழனத்தை அழிக்கும் சிறிலங்க அரசின் முயற்சிகளை முடிவுக்குக் கொண்டு வரவும் , போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுத் தரவும் கனடியர்கள் பாடுபட வேண்டும் எனவும் அவர் இந்த அறிக்கையின் வாயிலாக கேட்டுக் கொண்டுள்ளார்.

மார்க்கம் - ஸ்டீல் பகுதியில் தமிழர் ஒருவரின் வீடு தீக்கிரை, மூன்றுபேர் மருத்துவமனையில் அனுமதி!



இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 4:30 மணியளவில் மார்க்கம் பகுதியில் அமைந்துள்ள தமிழர் ஒருவரின் வீட்டில் ஏற்பட்ட தீப்பிழம்பு காரணமாக மூன்று பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்ப துடன் வீடு பாரிய சேதத்துக்கு உள்ளாக்கப்பட் டிருப்பதாகவும் வெளியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மூன்று வாகனங்கள் முற்றாக தீக்கிரையாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்டீல் அவெனியூ - மார்க்கம் றோட்டுக்கு அண்மையில் ஈஸ்ட்வல் ட்ரைவ்வில் அமைந்துள்ள தமிழருக்குச் சொந்தமான வீடே தீக்கிரைக்கானது. இதில் குழந்தைகள் உட்பட 12 பேர் இருந்தார்கள். இவர்களில் 6 பேர் விருந் தினராக தங்கியிருந்தார்கள் எனவும் வீட்டின் கீழ் தளத்தில் இருந்த மூவருக்குமே காயம் ஏற்பட்ட தாகவும், இவர்களை வீட்டின் உரிமையா ளரினால் வெளியேக் கொண்டுவரப்பட்ட பின் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று அறிய வந்துள்ளது.

இவர்களில் ஒருவர் தீக் காயங்களுடன் ரொறொண்ரோ மருத்துவமனையிலும், மற்றைய இருவரும் புகையினை உட்சுவாசித்தமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக மார்க்கம் ஸ்ரோ.:.ப்வில் மருத்துவமனையிலும் அனுமதிக் கப்பட்டிருக்கின்றார்கள்.

தீயணைப்புப் படையினர் 30 நிமிடம் தாமதமாக வந்தனர் எனவும் இதனால் தான்



பாரிய சேதங்கள் ஏற்பட்டதாகவும், மீட்புப் படையினர் வராமல் வீட்டினுள் இருந்தவர்கள் வெளியே வரவில்லை எனவும் அயலவர்கள் கருத்துத் தெரிவித்தனர். கார் தரிப்பிடத்தினுள் (காராஜ்) ஏற்பட்ட தீ வெடிப்பே இதற்குக் காரணமாக இருக்கலாம் என ஊகிக்கப் பட்டாலும் தீ விபத்துக்கான சரியான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

வீட்டிற்கு ஏற்பட்ட சேதம் $900,000 ஆக இருக்கும் என மதிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி மார்க்கம் 7 ஆம் வட்டாரத்துக்குச் சேர்ந்த பகுதி யாக இருப்பதனால் நகரசபைத் தலைவர் திரு லோகன் கணபதி பாதிக்கப்பட்ட குடும்பத் தினரைச் சந்தித்து ஆறுதல்கள் தெரிவித்துள்ளார்

அதிக ஊதியத்துடன் கூடிய தரமான வேலைவாய்ப்புக்கள் கனடாவில் பெருகி வருகின்றது - சி ஐ பி சி தெரிவிப்பு!



சமீப காலமாகவே அதிக ஊதியத் துடன் கூடிய தரமான புதிய வேலை வாய்ப்புக்கள் கனடாவில் அதிகமாகி யுள்ளதாம். ஊஐடீஊ நடத்திய ஆய்வொன்றின் மூலம் இந்த தகவல் தெரிய வந்துள்ளது. அதிக ஊதியத் துடன் கூடிய முழு நேர வேலை வாய்ப்புக்கள் அதிகளவில் கிடைத் து வருவதால் பகுதி நேர வேலை களுக்கு கிராக்கி ஏற்படத் தொடங்கி யுள்ளது. 2012 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கனடிய வேலை வாய்ப்புக்களில் முன்பெப் போதும் இல்லாத வகையில் தரத்திற்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டு வருவது வியக்க வைப்ப தாக் உள்ளது என ஆய்வு முடிவுகளில் கூறப்பட்டுள் ளது.

இந்த வருடத்தின் முதல் அரையாண்டில் மட்டும் 155,000 புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக் கப்பட்டுள்ளன. இவை அனைத்துமே அதிக ஊதி யத்தினை வழங்கக் கூடிய முழு நேர வாய்ப் புக்களே என்கிறது ஆய்வு. இந்த வளர்ச்சி கடந்த அரையாண்டுடன் ஒப்பிடும் போது 1.1 சதவீதம் கூடுதலாகும். பகுதி நேர வேலை வாய்ப்புடன் ஒப்பிட்டால் இந்த வளர்ச்சி 10 மடங்கு அதிகமானது.

அதிலும் மிக முக்கியமாக பெட்ரோலியம், நிலக்கரி தயாரிப்பு, எண்ணெய் மற்றும் எரிவாயு பிரித்தெடுத்தல், கனரக மற்றும் கட்டுமான பொறியியல் தொழில்நுட்பம், போக்குவரத்து உபகரணங்கள் தயாரித்தல் ஆகிய வேலை களுக்கு மவுசு கூடியுள்ளதாகத் தெரிகிறது. உலகாளாவிய பொருளாதார மந்த நிலை ஏற்பட்டுள்ளதால் இதில் ஸ்திரத்தன்மை நீடிக்குமா அல்லது 2008–09 ல் ஏற்பட்டதைப் போன்று மீண்டும் ஊதியம் குறைக்கப்பட வாய்ப்புள்ளதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது

கனடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின்

(FeTNA) 26ஆவது தமிழ் விழா ரொறொண்ரோ மாநகரில் இடம்பெறும்



வட அமெரிக்காவின் மிகப்பெரும் தமிழ் விழாவான வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங் களின் கூட்டமைப்பின் தமிழ் விழா இவ்வாண்டு வெள்ளி விழாக் காண்கிறது. யூலை 7ஆம் நாள் இரண்டாவது நாள் நிகழ்வுகளின் முக்கிய விடயமாக 2013ஆம் ஆண்டின் தமிழ் விழா கனடாவில் ரொறொண்ரோ மாநகரில் நடை பெறும் என்ற அறிவிப்பு வெளியானது. முதன் முறையாகக் கனடாவில் நடைபெறப் போகும் தமிழ் விழா என்பதால் பெரும் எதிர் பார்ப்பை யும் மகிழ்ச்சியையும் கனடியத் தமிழர் மத்தியில் இவ் அறிவிப்பு ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் பால்டி மோர் மாநக ரில் இடம் பெறும் வெள்ளி விழாவைத் தொடர் ந்து 26ஆவது ஆண்டு விழா கனடாவின் ரொறொ ண்ரோ மாநகரில் அடுத்த ஆண்டு இடம்பெறும். 2013ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 5 மற்றும் 6 ஆம் நாட்களில் சொனி நடுவத்தில் (Sony Centre) தமிழ் விழா 2013 நடைபெறும்.

செம்மொழியாம் தமிழ் மொழியை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற மகாகவியின் கனவுக்கு உயிரூட்டி வரும் புலம்பெயர் தமிழரின் கூட்டு முயற்சியால் இயல், இசை மற்றும் நாடகத் தமிழை உயர்த்திடும், போற்றிடும் விழாவாக இவ்விழா அமைகிறது. வட அமெரிக்கா முழுவதும் அமைந்துள்ள பல தமிழ் அமைப்புக்களின் ஒன்றுபட்ட முயற்சியால் இந் நிகழ்வு வெள்ளிவிழாக் கொண்டாடுகிறது. இவ் அமைப்பின் கனடிய உறுப்பினராக விளங் கும் கனடியத் தமிழர் பேரவை (Canadian Tamil Congress) அடுத்த ஆண்டின் விழாவை கனடாவில் நடத்த எடுத்த பெரு முயற்சியின் பலனாக முதன் முறையாகத் தமிழ் விழா கனடா வருகிறது.

தமிழின் அனைத்துப் பெருமைகளை யும் கொண்டாடும் ஒரு விழாவாக விளங்கும் தமிழ் விழா அடுத்த ஆண்டிலும் அதன் தரம் குறை யாமலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும் ரொறொண்ரோவில் இடம்பெற அனைத்து முயற்சிகளும் செய்யப் பட்டு வருகின்றன" எனக் குறிப்பிட்டார் கனடியத் தமிழர் பேரவையின் சார்பில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப் பில் இயக்குனராக விளங்கும் திரு. பிரகல் திரு அவர்கள். தமிழுக்கும் கனடியத் தமிழருக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாக அமைய விருக்கும் இந் நிகழ்வில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களையும் இணைந் துப் பணியாற்ற வேண்டுகிறோம். கனடியத் தமிழ ருக்கு கிடைத்த அரிய வாய்ப்பை நன்கு பயன் படுத்தி தமிழைக் கொண்டாடுவதோடு பல்லின மக்களுக்கும் தமிழர்தம் மொழி, கலாச்சாரம், பண்பாடு, கலைகள், அரசியல், அறிவியல், வர்த் தகம் மற்றும் இன்னபல விடயங் களை உணர்த்த இவ்விழா உதவும் என அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

கனடியத் தமிழர் வரலற்றில் ஒரு மைல் கல்லாய் அமையவிருக்கும் தமிழ் விழா 2013 சிறப்புற கனடா மற்றும் வட அமெரிக்கா வாழ்த் தமிழ் உறவுகளின் ஆதரவும் உழைப்பும் மிக அவசியமானது. பங்காளராயும் பணியாளராயும் இணைந்து செயற்படக் கனடியத் தமிழர் பேரவையைத் தொடர்பு கொள்ளவும்.



மண்பறிப்பு என்பது இனவழிப்பின் நுணுக்கமான திட்டமிட்டச் செயல்

பேராசிரியர் சேரன்



மண்பறிப்பு என்பது எம் அடையாளத்தைச் சிதைப்பதற்கான ஒருவழி முறை மட்டுமல்ல நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட இனவழிப்பின் ஒரு பகுதி (பநெழஉனைந டில யவவசவைழை) என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும் என கனடாவின் வின்ஸர் பல்கலைக்கழகச் சமூகவியல்இமானிடவியல் பேராசிரியரும் கவிஞருமான சேரன் அவர்கள் தெரிவித்தார்.கடந்த யூலை 4 திகதி மாலை ஸ்கார்பறோ சிறி ஐயப்பன் ஆலயத்தில் கனடா தமிழ் அரசியல் செயலவை ஒழுங்கு செய்த "சிங்களக் குடியேற்றங்களும் வரலாற்றுக் கருத்தியலும்" தொடர்பான கலந்துரையாடலின் போது இந்தக் கருத்தினை தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனும், யோகேஸ்வரனும் சிறப்புரையாற்றினார்கள்.

"எல்லைகளை நோக்கி நாங்கள் செல்லாவிட்டால் எங்களை நோக்கி எல்லைகள் வரும்" என்று 1960 களில் திரு சி. சுந்தரலிங்கம் கூறியது போல் நாங்கள் எங்கள் எல்லையை நோக்கி செல்வதில் அக்கறை காட்டாமல் விட்டு விட்டோம் அதனால் இன்று எம்மை நோக்கி எல்லைகள் வரத் தொடங்கி விட்டன. இனப்படுகொலை சார்ந்து தமிழ் மக்களை எல்லா இடங்களிலிருந்தும் விரட்டியடிக்கின்ற இந்த நிலப்பறிப்பு நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டு எல்லாவகையான இலங்கை அரசுகளாலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பதை சேரன் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

வடக்கில் தந்திரோபாயரீதியாக இராணுவ முகாம்களையும் முடிந்தால் சிங்களக் குடியேற்றங்களையும் நிறுவி தமிழர்களை ஒடுக்க முடியுமோ அவ்வாறு நடந்து கொள்ளும் படி சிறிமாவின் ஆட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக இருந்த சி. நீல் ஜெயவீரவிடம் அன்றைய பாதுகாப்பு அமைச்சரினால் வலியுறுத்தப்பட்டிருந்தது என்பதைக் குறிப்பிட்ட சேரன் அவர்கள் குடியேற்றங்கள் தொடர்பான அண்மைக்கால வரை படங்களையும் விளக்கங்களையும் வழங்கினார்.

சிங்கள அரசாங்கம் தனக்கென்றொரு மீள் நிர்ணயிக்கப்பட்ட மாகாண எல்லை வேலைத் திட்டங்களுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் கடல் ஒரு எல்லையாக இருக்க வேண்டும் என்று 80 களின் ஆரம்பித்தில் சில சிங்களக் கோட்பாட்டாளர்கள் முன்வைத்த திட்டத்தில் மிகத் தெளிவாக இருக்கின்றது என்றும் அதன் அடிப்படையில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த நிலப்பரப்பைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஐரோப்பியர்கள் வருவதற்கு முன் தமிழ் மக்களின் பரம்பல் எப்படி இருந்தது என்றும் பின்னர் பிரித்தானியர்களால் எவ்வாறு நிர்வாக வசதி என்ற பேரில் இவை மாற்றப்பட்டன என்பதிலிருந்து தற்போதைய அரசின் நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் தமிழர் நிலப்பரப்பு எவ்வாறு சுருங்கப் போகின்றது என்பதையும் மிகவும் தெளிவாக விளக்க வரைபடங்களுடன் சேரன் அவர்கள் தெரியப்படுத்தினார்.

புலம்பெயர்ந்த மக்கள் களத்தில் உள்ளவர்களுக்கு இங்கிருந்து கொண்டு கட்டளைகளை இடாமல், களத்தில் உள்ளவர்கள் எடுக்கின்ற முடிவுகளுக்கும் செயல்பாடுகளுக்கும் உணர்வுத் தோழமையுடன் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மண்பறிப்புக்கு மாற்றாக புலம்பெயர்ந்தோர் செய்யக் கூடிய வேலைத் திட்டங்களையும் அவர் விளக்கினார். மிக முக்கியமாக வெளிநாடுகளில் இருப்பவர்களினாலேயே காணி அபகரிப்பை தடுத்து, மீள பெறமுடியுமென்று கூறியதுடன் எவரும் காணிகளை விறக வேண்டாம் எனது தெரிவித்த அவர், இலங்கையில் நடாத்தப்படும் நில அபகரிப்புக்கும் சிங்கள குடியேறத்துக்குமாக, நம்மவர்கள் நடாத்தும் போராட்டங்களில், அனைவரும் தோளோடு தோள் நிற்போமெனவும் கூறினார். அதேவேளை வடக்கு கிழக்கில் வாழ்வோரின் வாழ்வாதார நிலமைக்கும் உதவி புரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ் அகதி மக்களை தாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள கனடிய அரசின் C-31 சட்ட மூலம் தமிழ் மக்களிடம் NDP பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடி உரையாடல்

கனடிய அரசு சமீபத்தில் நிறைவேற்றியுள்ள C-31 சட்ட மூலத்தில் அகதி மக்களை நாட்டிற்குள் நுழைய விடாதபடி செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஸ்காபுறோ நகர தமிழ் சமூகத்தினரிடையே என்.டி.பி கட்சியின் ஸ்காபுறோ றூஜ் ரிவர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனும், ரொறொண்ரோ டண்போர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கிரேக் ஸ்கொட்டும் விரிவாக கலந்துரையாடினர். இந்த கலந்துரையாடல் கடந்த மாதம் 28 திகதி ஸ்காபுறோவில் உள்ள பென்டேல் பொது நூலகத்தில் நடைபெற்றது.

கனடாவிற்கு அகதிகளாக வரும் மக்களை ஏற்றுக் கொள்ளும் விதங்களில் மாற்றங்களைப் புகுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சட்ட வரைவிற்குக் கனடிய பாராளுமன்றில் இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட வரைவின் பல அம்சங்கள் வருத்தமளிக்கும் விதத்தில் அமைக்கபப்ட்டுள்ளன என்பது குறித்தும் அதன் பாதகமான அம்சங்கள் குறித்தும் மக்களிடம் இருவரும் விரிவாக விளக்கினார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது,

முக்கியமாக இதில் இடம் பெற்றுள்ள பல சட்டங்கள் கனடிய மனித உரிமைச் சட்டங்களை மீறும் வகையிலும்இ சர்வதேச மனித உரிமை, அகதி, சிறார் சட்டங்களை மீறும் வகையிலும் அமைக்கபப்ட்டுள்ளது.

எந்த வல்லுனர்களையும் கலந்தாலோசிக்காமல் உலகின் பாதுகாப்பான நாடுகள் எவை என்பதை தீர்மானிக்கும் உரிமை முழுவதுமாக குடிவரவுத் துறையின் கைகளில் ஒப்படைக் கபபட்டுள்ளது.

நாட்டிற்குள் வந்து அகதி உரிமை கோருபவர்களை தடுப்புக் காவலில் வைக்கும் சட்டங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. வருடத்தில் ஒன்றிரண்டு அகதி கோரிக்கைகளை மட்டுமே பரிசீலித்து அங்கீகரிக்கும் வகையில் கடுமையான சட்டங்களை கொன்சவேற்றிவ் அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. முறைப்படி வராதவர்களை தடுப்புக் காவலில் வைப்பதாக கூறும் அரசு எதை வைத்து முறைப்படி வராதாவர்கள் என அகதி மக்களை தீர்மானிக்கிறது என்பது விளக்கமாகக் கூறப்படவில்லை. வெறுமனே அகதிகளாக வருபவர்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு தனை தீர்மானிப்பது எப்படி சரியானதாக இருக்க முடியும்? அரசின் கூற்றுப்படி பார்த்தால் ஒருவராக வருபவர்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுவார்களா? ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் குடும்பத்துடன் வருபவர்கள் முறைப்படி வராதவர்கள் என்றே விளங்கிக் கொள்ள முடிகிறது.

குழந்தைகளை உடன் அழைத்து வரும் அகதி பெற்றோர்கள் வேற்று நாட்டவராகக் கருதப் படுவதால் , குழந்தைகளை அவர்கள் தங்களுடன் தடுப்புக் காவலில் வைத்துக் கொள்ள விரும்புகின்றனரா அல்லது பிறர் பராமரிப்பில் விட விருப்பமா என்பதை தெரிவு செய்யும்படி நிர்பந் திக்கப் படும் நிலை உள்ளது.

குடிவரவு அமைச்சகம் பாதுகாப்பான நாடுகளாக வரையறை செய்யப்பட்ட நாடுகளிலிருந்து வந்துள்ள மக்கள் அனைவரும் வெளிநாட்டவராகவே கருதப்படுவர். இவர்களுக்கு அகதி உரிமை கோரும் உரிமைகளும் கிடையாது என்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

வெளிநாட்டவராகக் கருதப்படுபவர்கள் நிரந்தர குடியுரிமை பெற குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். அவர்கள் மீண்டும்



அவர்கள் மீண்டும் தங்கள் சொந்தங்களுடன் சேர கூடுதலாக 5 ஆண்டுகள் ஆகும். அது வரையிலும் இவர்களால் வேறு எங்கும் பயணம் மேற்கொள்ள அனுமதி மறுக்கும் வகையில் பயண ஆவணங்கள் அனைத்தும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விடும்.

மார்ச் 2009 முதல் கனடாவிற்குள் வந்துள்ள அகதி மக்களின் கோரிக்கையை நிராகரிக்கும் பொறுப்பு முழுக்க முழுக்க குடிவரவு அமைச்சரிடமே ஒப்படைகபப்ட்டுள்ளது.

இந்த சட்ட வரைவினை பாராளுமன்ற அவையில் கொண்டு வந்த கொன்சவேற்றிவ் அரசு, மிகக் குறைந்த கால விவாதங்களை மட்டுமே அனுமதித்ததையும், அதே போன்றே இதற்கான பரிசீலனைக் குழுவிற்கும் குறைந்த அவகாசங்களைக் கொடுத்ததினையும் என்.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் சுட்டிக் காட்டினார்.

பரிசீலனைக் குழுவின் முன் வாக்கு மூலம் அளித்த கனடிய சட்டத்தரணிகள் சங்கம், the Barreau du Quebec, அகதிகளுக்கான கனடிய சட்டத்தரணிகள் சங்கம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையகம், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அகதிகளுக்கான கனடிய சபை, மருத்துவர்கள் சித்திரவதை துன்புருத்தல்களிலிருந்து பிழைத்து சாட்சிளாக கண் முன் நிற்பவர்கள், மற்றும் பல நிபுணர்களும் புதிய மாற்றங்கள் சட்ட வரைவில் சேர்க்கப்படக்கூடாது என்பதனையும் இந்த சட்ட முன்வரைவு முழுவதுமாக கைவிடப்பட வேண்டும் என்றுமே வலியுறுத்தினர் என்றும் மக்களிடம் தெரிவித்தார்.

அதே நேரத்தில் பரிசீலனைக் குழுவின் முன்னர் வாக்குமூலம் அளித்த கொன்சவேற்றிவ் உறுப்பினர்களின் கேள்விகளையும் கருத்துக்களையும் உற்று நோக்கும் போது அவர்களுக்கு புகலிடம் தேடி வரும் அகதி மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் அவர்களின் அனுபவங்கள் உள்ளிட்ட விடயங்கள் புரியவே இல்லை என்பதும் அதனை புரிந்து கொள்ள கொன்சவேற்றிவ் கட்சியினர் தயாராக இல்லை என்பதுமே தெரிய வருகிறது.

நிபுணர்கள் தரப்புடன் இணைந்து இந்த சட்ட முன் வரைவினை தடுத்து நிறுத்துவதற்கும, சர்ச்சைக் குள்ளான மாற்றங்களை எதிர்த்தும் என்.டி.பி எவ்வளவோ போராடியும் கூட அதனை அரசு கவனிக்காமல் சட்ட முன் வரைவினை நிறைவேற்றி விட்டது என ராதிகா குறை கூறினார்.

புதிய சட்ட முன் வரைவின் பாதகங்களை விவரித்துக் கூறிய என்.டி.பி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ராதிகா சிற்சபைஈசனும் கிரேக் ஸ்காட்டும் இதனால் உண்மையில் பாதிக்கப்படப் போவது ஆட்கடத்தல் பேர்வழிகள் அல்ல, ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் மக்களே என்பதையும் எடுத்துக் கூறினார்.

முக்கியமாக எம்.வி சன் சீ மற்றும் ஓசன் லேடி கப்பல்களில் வந்திறங்கிய தமிழ் அகதி மக்களுக்கு எதிராகவே இந்த சட்ட முன் வரைவு தயாரிக்கபப்டுள்ளது. சிறிலங்காவில் போர் நடைபெற்ற போதும் அதற்குப் பின்னரும் போரின் போது மனித உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் ஜான் பைர்ட் கூறுகிறார். ஆனால் அதே அரசு அங்கிருந்து வந்த அகதி மக்களை அங்கீகரிக்காமல் குடிவரவுத் துறையின் மூலம் கட்டுப்படுத்த நினைப்பது கொன்சவேற்றிவ் அரசின் பாசாங்கு நடவடிக்கைக்களை அனைவருக்கும் பகிரங்கமாக எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளதாக ராதிகா சிற்சபை ஈசன் கூறியதோடு அரசின் இந்தப் போக்கிற்கு கடுமையான கண்டனங்களையும் தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கெதிரான அரசின் புதிய சட்டமூலம் அவர்களின் மன ஆரோக்கியத்தை கேள்விக்குறியாக்கி விடும் கனடிய மருத்துவ சங்கம் சிறப்புக் கட்டுரை

புகலிடம் தேடி கனடாவில் தஞ்சமடையும் அகதி மக்களை முறைப்படியாக நாட்டிற்குள் வராதவர்கள் என்ற போர்வையில் புதிய சட்டங்களை பயன்படுத்தி நீண்ட நாட்கள் அரசு காவலில் வைக்குமானால் அதுவே அந்த மக்களின் மன ஆரோக்கியம் முற்றிலும் சிதைந்து விடுவதற்கான காரணமாக அமையும் என கனடிய மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது. நேற்று வெளியான கனடிய மருத்துவ சங்கத்தின் இதழில் இது குறித்த சிறப்புக் கட்டுரையொன்றை மருத்துவர்கள் ஜானெட் கிளேவ்லேன்ட் மற்றும் சிசில் ரெளச்சே ஆகியோர் எழுதியுள்ளனர்.

அரசின் புதிய C-31 சட்டமூலம் கடந்த யூன் 28 முதல் சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட மூலம் குறித்து அறிந்து வைத்துள்ள அகதிகள் பலர் இனி நாம் சிறையிலிருந்தே வெளியேற முடியாது என எண்ணி தற்போதே மனதளவில் பெரும் பாதிப்பிற்குளாகி விட்டனர் என்றும் அது மட்டுமன்றி புதிய சட்டங்களின் மூலம் அகதிகளாக வந்து சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள 16 வயதுக்கும் குறைவான சிறார்களின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக்குறியாகி விட்டதும் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புதிய சட்டங்களின் படி 16 – 18 வயதிற்குள் உள்ளோர் இளையோர் என்ற பிரிவின் கீழ் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், 16 வயதுக்கும் கீழேயுள்ள சிறார்களை பெற்றோர்களிடமிருந்து பிரித்து காப்பகங்களில் விடப்படுவதாகவும், அப்படி வர மறுக்கும் குழந்தைகளை அவர்கள் பெற்றோர்களில் தாய், தந்தையரை தனித்தனியே பிரித்து தடுப்புக் காவலில் அரசு வைத்து வருவதால் இதை உடனிருந்து பார்க்கும் சிறார்கள் மன ஆரோக்கியத்தை முழுமையாக இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்பதையும் எந்த நிலையிலும் அரசின் இந்த செயல்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதையும் கனடிய குழந்தை நல மருத்துவர் சங்கம் உட்பட அனைத்து மருத்துவ சங்கங்களும் அரசுக்கு தெரிவித்து வருவதுடன், சிறார்கள் யாரும் தடுப்புக் காவலில் வைக்கப்படக் கூடாது என்பதால் அவர்களை மீட்டுக்க போராடியும் வருகின்றனர்.

இளைய சந்ததினருக்கு எங்கள் வரலாறு தொடர்பான தெளிவான விளக்கம் கொடுக்கபட வேண்டும்- சிறிதரன்

புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் இளைய சந்ததினருக்கு எங்கள் வரலாறு தொடர்பான தெளிவான விளக்கம் கொடுக்கபட வேண்டும் இதற்காக துறைசார்ந்தவர்கள் மூலம் பயிற்சி பட்டறைகள் ஒழுங்க்கு செய்யப்படல் வேண்டும் என்ற வேண்டுகோளை இலங்கை யிலிருந்து கனடா வந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன் வைத்துள்ளார்.

கடந்த ஜூன் 4 ஆம் திகதி மாலை ஸ்கார்பறோ சிறி ஐயப்பன் ஆலயத்தில் நடைபெற்ற "சிங்களக் குடியேற்றங்களும் வரலாற்றுக் கருத்தியலும்" தொடர்பான கலந்துரையாடலின் போது கல்ந்து கொண்டு பேசுகையில் மேற்படி வேண்டுகோளை பாராளுமன்ற உறுப்பினர் முன்வைத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கடவழியாக இழுத்தெடுக் கப்பட்டு முட்கம்பிகளுக்குள் அடைக்கப்பட்ட மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் இன்று கூட பலர் தடப்பால் மற்றும் தகரக் கொட்டகை களுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தங்கள் சொந்த இடங்களில் தங்கலாம் என்று நம்பி வந்தவர்களுக்கு சென்று பார்க்கக் கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள வளம் செறிந்த விவசாய பூமிகளான ஒலுமடு பட்டிக்குடியிருப்பு தந்திரிமலை உட்பட பல கிராமங்களில் மக்கள் மீளக் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அரசு கச்சிதமாகச் செய்து வருகின்றது. அதன் எல்லைகளாக தான் டொலர் ஃபார்ம், ஹென் ஃபார்ம் போன்ற அமைப் புக்களும் முல்லைத் தீவுடன் இணைந்திருந்தன. ஓதியமலை, நைனாமடு போன்ற இடங்கள் எமது மக்கள் மீள்குடியேற முடியாத இடங்களாக உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, நாயாறு, போன்ற இல்மனைட் கனிய வளம் காரணமாக அந்த இடங்களுக்கு 20 வருடங்களுக்குப் பின் எமது மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியிருக்கச் சென்ற போது தடுப்பதிலும் மீள் குடியேற்ற மக்களுக்கு தேவை யான வசதிகளை செய்வதை தடுப்பதிலும் இலங்கை அரசு முயற்சிசெய்தது. கனிய மண் வளத்திற்காக ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்சவும், அவரது நண்பர்களும் தமிழர்களின் நிலங்களை வளைத்துப் போட்டுள்ளார்கள். போராட்டக் காலங்களில் அங்கிருந்து மண்ணைக் கொண்டு செல்லமுடியவில்லை ஆனால் இன்று இவர்கள் இந்த மண்ணை அபகரிப்பதிலும் அங்கிருந்து தமிழ் மக்களை அப்புறப்படுத்து வதிலும் ஈடுபடுகின்றார்கள். போராட்டம் நடந்த காலக்கட்டத்தில் எங்களிடமிருந்த பாதுகாப்புகள் காரணமாக எங்கள் வளங்கள் காப்பற்றப் பட்டிருந்தன. ஆனால் இன்று அந்த வளங்களை அவர்கள் இலகுவில் எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கின்றது.

அம்பாறை மாவட்டம் எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக பறிபோனதோ அதைவிட நூறு மடங்கு வேகத்தில் முல்லைத்தீவு மாவட்டம் பறிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சொந்தமான திருமுருகண்டி, முருகண்டி பகுதிகளின் செழிப்பு மிக்க செம்மண் பிரதேசத்தின் 4000 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவக் குடியிருப்புக்களுக்காக



ஒதுக்கப்பட்டு அவற்றில் இராணுவத்தின் குடும்பங் களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கையில் சிறிலங்கா அரசு முனைப்புக் காட்டி வருகின்றது.

வன்னியில் பெரும்பகுதிகள் குளங்களைக் கொண்டமைந்தவை. எம்மவர்கள் குளத்து மீன் களை உண்பது குறைவு இதனைக் காரணம் காட்டி 200–250 சிங்களக் குடுப்பங்களை குடம் பத்திற்கு அரை ஏக்கர் வழங்கி குளங்களுக் கருகில் குடியமர்த்துகின்ற திட்டத்தில் அரசாங்கம் கரிசனைகாட்டி வருகின்றது.

இரணைமடு குளத்தின் நீர் கிளிநொச்சி விவசாயத் துக்குப் போதுமானதல்ல. இதனை மகாவலி ஆற்றுடன் இணைத்து யாழ்பாணத்துக்கு குடி நீர் விநியோகத்திற்கு கொண்டுசெல்லுதல் என்ற ஆலோசனை பரவலாக முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு செய்யப்படின் மகாவலி ஆறு ஓடுகின்ற பகுதி, இரணைமடு குளம் அது பாய்கின்ற நிலப்பரப்பு மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும். அதன் பின் அவர்கள் யாரை வேண்டுமானலும் குடியேற்றலாம் என்ன நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். இதனை மாகாண அரசினால் கட்டுப்படுத்த முடியாது.

புதுக்குடியிருப்பின் நந்தி ஆறு முதல் கேப்பா வளவு வரையுள்ள தனிப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் உட்பட4200 ஏக்கர் நிலப்பரப்பு 155 ஆவது படைப்பிரிவுக்கென முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு இருக்கின்றது. இதற்குள் எவரும் செல்ல முடியாது. முள்ளிவாய் கால் ஐம்பதாம் பொக்கனை புதுமாத்தளன் உள்ளிட்ட 17.5 சதவீதமான நிலப்பரப்பு அரசாங்கத்திந் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள் ளது. இவற்றுக்குள் யாரும் எந்தக் காலப்பகுதி யிலும் இனி செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள் ளதுடன் மீள் குடியேற்றத்திற்கும் சாத்தியப் பாடில்லை. இப்பகுதி மக்களை கிம்லி என்ற புதிய பெயர் வைக்கப்பட்ட இடத்தில் குடியேற்றபப்ட் டுள்ளார்கள். கிளிநொச்சியில் பரவிபாச்சான் மருதமுனைப் பகுதிகளுக்கு மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு இராணுவமயமாக்கப்பட்டுள்ளது. யாழ்பாணத்தில் 27 கிராமசேவகர் பிரிவுகளில் மக்களை மீளகுடியமர்த்த முடியவில்லை. என சிறிதரன் குறிப்பிட்டார்.

தமிழினத்தின் அடையாளங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகின்றது மட்டக்களப்பு பா.உ. யோகேஸ்வரன்



தமிழினத்தின் அடையாளங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடபட்டு வருகின்றது. சைவ வழிபாட்டு தலங்கள் அழிக்கப் பட்டு பௌத்த வழிபாட்டு தலங்களாக மாற்றப் பட்டு வருகின்றன. யுத்தத்தின் பின்னராவது அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அரசு முன்வை க்குமென எதிர்பார்த்தோம். ஆனால் அரசு எம்மை மாத்திரமல்ல சர்வதேசத் தையுமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

கடந்த யூலை 2 ஆம் திகதி மாலை ஸ்காபுறோ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நடை பெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க கனடாக் கிளையின் சர்வதேச விழாவில் சிறப்பு விருந்தின ராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு எம்.பி.திரு.சீனித்தம்பி யோகேஸ்வரன் இவ்வாறு கூறினார். வடக்கு கிழக்கு இணைந்த தீர்வுக் காகவே நாம் போராடி வருகின்றோம். கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர்கள் அனுபவித்து வரும் உரிமையை சொந்த நாட்டிலுள்ள தமிழர்கள் அனுபவிக்க முடியவில்லை. மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை உரிமைகளோ உதவிகளோ வழங்கப் படவில்லை. இராணுவ உயரதிகாரிகளே வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அதிகாரி களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அனுபவிக்க முடியவில்லை. மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை உரிமைகளோ உதவிகளோ வழங்கப் படவில்லை. இராணுவ உயரதிகாரிகளே வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அதிகாரிக ளாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் நான்காவது மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப் படுகின்றனர்.

இலங்கை தமிழ் மக்களின் பூர்வீக நாடு என பௌத்த நூலான மகாவம்சமே கூறியுள் ளது. புத்தர் இரண்டாவது முறையாக இலங்கைக் கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்தில் நாகர்கள் வாழ்ந்ததாகவும் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த போது விஜயன் இலங்கைக்கு வந்தான் எனவும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நிலைமை மோசமாகி விட்டது. நாம் இலங்கை மக்கள் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப் படுகின்றோம். இந்தியாவில் சிறுபான்மை இனத்தவர்களான சீக்கியரும் அமெரிக்காவில் சிறுபான்மை இனத்தவர்களான கறுப்பு இனத்த வர்களும் ஜனாதிபதியாக ஆகலாம். ஆனால் இலங்கையில் நம்மினத்தவர்கள் ஜனாதிபதி ஆக முடியாது. 1960ம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. அங்கு இன்று ஆறு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டு எமது கோரிக்கைக்கு உங்களது நாடுகளின் ஆதரவினைப் பெற வேண்டும். வடக்கு கிழக்கு எமது பூர்வீக பூமி. தமிழ் தேசியக் கூட்டமைப்பி னரான எம்மிடையே பிளவு எதுவுமே இல்லை. நாம் உறுதியாக உள்ளோம்".

தமிழ் மக்களுக்கு பண்பாடு மிக முக்கியம். தமிழினம் தனது பூர்வீகத்தைப் பாதுகாத்துக் கொள்ள பண்பாடு பாதுகாக்கப் படவேண்டும். அதனை பண்பாட்டு இயக்கம் புலம்பெயர்ந்த நாடுகளில் செய்து வருகின் றது என்று பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

48 மணி நேர தொடர்ச்சியான இசைமழை சாதனை நோக்கி

பவதாரணியின் பாரதி கலைக்கோயில் மாணவர்கள்



தொடர்ச்சியாக இடைவிடாது 48 மணிநேர இசை நிகழ்ச்சியை மக்களுக்கு வழங்கும் முயற்சியில் பவதாரணியின் பாரதி கலைக்கோயில் மாணவர்கள் கடந்த 30 திகதியிலிருந்து ஒத்திக்கையில் ஈடுபட்டிருந்தனர். தற்போது அவர்கள் இந்த ஒத்திகை நிகழ்வில் வெற்றிகரமாக 48 நிறைவு செய்து தங்கள் குறிக்கோளில் வெற்றி பெற்றுள்ளனர்

60 பாடகர்கள், 30 இசைக் கருவி கலைஞர்கள் சேர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள். மார்க்கம் ஸ்ரோ.ஃ.ப்வில் மருத்துவமனைக்கு $ 100,000 நிதி வழங்கும் உன்னத பணிக்காக இவர்கள் சளைக்காமல் இந்த ஒத்திகைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர் என பாரதி கலைக் கூட இயக்குனர் மதிவாசன் இகுருவிக்குத் தெரிவித்துள்ளார்.

இளையோர் முதல் பெரியோர் வரை உள்ள இந்த குழுவில் இடைநிலை மாணவர் தொடக்கம் பட்டபின் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களும் ஆர்வத்துடன் பயணிப்பதை காணக்கூடியதாக இருந்தது.

2008 ஆம் ஆண்டு முதன் முதலாக பாரதி கலைக் கோயில் மாணவர்கள் தொடர்ச்சியாக் 24 மணித்தியாளங்கள் இடைவிடாத இசை நிகழ்வின் மூலம் $ 39,000 களை சேகரித்து ரூஜ் ரிவர் மருத்துவமனைக்கு நிதி உதவியாக வழங்கி இருக்கின்றார்கள். பின்னர் 2010 ஆண்டு மார்ச் மாதம் இக் கலைக் கல்லூரியின் நிறுவனர் பவதாரணியின் 21 ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இசைநிகழ்ச்சி மூலம் கூ 15,000 களை ரொறொண்ரோ மார்க்கிரட் புற்று நோய் மருத்துவமனைக்கும்இ அதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் கனடியத் தமிழர் பேரவையுடன் இணைந்து கூ 4,000 களை புற்று நோய் ஆராய்ச்சிக்காகவும் இவர்கள் வழங்கியிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நிகழவுள்ள 48 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சி மூலம் கூ 100,000 சேகரித்து தமிழர்கள் செரிந்து வாழும் மார்க்கம் ஸ்ரோ.ஃ.ப்வில் மருத்துவமனையின் அத்தியாவசியத் தேவைகளுக்காக வழங்க இளம் மாணவர்கள் ஆர்வத்துடன் தங்கள் நித்திரையினையும் துறந்து ஒத்திகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன்ர்.

2009 ஆம் பாரதிக் கலைக்கோயில் மாணவர்கள் 26 பேர் தொடர்ச்சியாக 56 மணி நேர இசை ஒத்திக்கை செய்திருந்தார்கள். தவிர்க்க முடியாத காரணங்களால் இது அரங்கேற்றப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பான் அம் விளையாட்டுப் போட்டிக்காக பிரமாண்ட நீச்சல் குளத்தை

ஸ்கார்பறோவில் உருவாக்குகிறது சென். லூயிஸ் நிறுவனம்



பான் அம் விளையாட்டுப் போட்டிக்கான் நீச்சல் குளத்தை உருவாக்கும் ஒப்பந்தத்தை பிரபல சென். லூயிஸ் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. 1996ல் அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்க கல்லூரிகள், பல்கலைக் கழகங் களை வடிவமைத்த பிரபல நிறுவனம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரமாண்டமான நீச்சல் குளத்தினை கட்டிடங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்த சென். லூயிஸ் (St.Louis) நிறுவனம் கனடாவின் முன்னோடி நிறுவனங்களுள் ஒன்றான NORR Limited உடன் இணைந்து 300,000–சதுர அடி நிலத்தில் இதனை வடிவமைக்க உள்ளதான அதிகாரபூர்வ அறிவிப்புக்கள் நேற்று ஒன்ரோறியோவில் வெளியிடப்பட்டுள்ளன.

ஸ்கார்பறோவில் உள்ள ரொறொண்ரோ பல்கலைக்கழகத்திலேயே நீச்சல் குளங்கள் உருவாக்கப்பட உள்ளன. இரு 10 –வரைபாதை ஒலிம்பிக் அளவிலான குளங்கள, 5 அடி ஆழமுள்ள நீச்சல் தொட்டி , 6,000 பேர் அமர்வதற்கான இருக்கை வசதிகள் இ உடற்பயிற்சிக் களத்துடன் கூடிய வெளிகள வீடு, உள்ளரங்க பாதைகள், எடை தூக்கும் பகுதி, 6,000 பேர் அமர்வதற்கான அதிகப்படியான இருக்கை வசதிகள்இ கனடிய விளையாட்டு நிறுவனத்திற்கான இல்லம் ஆகியவையும் உருவாக்கபட்ட உள்ளன. 2015 க்குள் இந்த பணிகள் அனைத்தும் நிறைவு பெற வேண்டும் எனவும் அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன.



கோப்பிப் பிரியர்களை மகிழ்வூட்ட ரிம்ஹோட்டனின்

புதிய இலவச கம்பியில்லா இணையதள சேவை!

பல இணையத்தள சேவை வழங்க்குனர்களுடனான ஆறு மாத கால செயல்முறை நடவடிக் கைகளுக்கு பின்பு ரிம்ஹோட்டன் தனது வாடிக்கையாளர்களை மகிழ்ச்சியூட்ட கனடா முழுவதும் உள்ள தனது உணவகங்களில் இலவச அதி வேக Wi-Fi இணையதள இணைப்புகளை வழங்க வுள்ளது.

இதைக்குறித்து ரிம்ஹோட்டனின் பிரதிநிதி ரோலாண்ட் கூறுகையில் "எங்கள் வாடிக்கை யாளர்களின் வாழ்க்கைமுறையை மிகவும் வசதியாகவும் எளிதாகவும் மாற்றுவதே எங்கள் கடமை என்றார். மேலும் செப்டம்பர் மாதத்தில் கனடா முழுவதும் 90 வீதமானவற்றில் இம்முறை செயல் படுத்தப்படும் என்றும் கூறினார். இச்செயல் முறை மூலம் வாடிக்கையாளர்கள் தங்களது நேரத்தை மிச்சப்படுத்த முடியும் என்றும் கூறினார்.

இந்த சேவையை மருத்துவமனைகள், மற்றும் எரிபொருள் விற்பனை நிலையங்களுடன் சேர்ந்து இயங்கும் ரிம்ஹோட்டன்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இங்கு எம்மவர்கள் பலரின் வியாபாரம் தொடர்பான பல கலந்துரையாடல்களும் சந்திப்புக்களும் இடம்பெறுகின்றன. கிப்லிங்க் போன்ற சில ரிம் ஹோட்டன்களில் முன்கூட்டியே பதிவு செய்து பொழுது போக்காக சீட்டாட்டங்களில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது. மக் டொனால்ட் இல் இந்த வசதி ஏற்கனவே இருக்கின்றது என்பதும் எமது மாணவர்கள் பலர் இதனை பயனுள்ள வகையில் உபயோகித்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ரொறொன்ரோவில் அனுமதியுடன் கஞ்சா வளர்க்கும் வீட்டு உரிமையாளரால் அண்டை வீட்டார் அவதி



வடக்கு யோர்க் நகர வீடொன்றிலிருந்து கஞ்சாவை எரிக்கும் கொடிய நெடி பரவுவதால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். பெரிய பைகள் நிறைய கஞ்சா செடிகளை வைத்துக் கொண்டு அவற்றை தீயிலிட்டு கொளுத்துவதை தான் கண்டதாகக் கூறுகிறார் இப்பகுதியில் வசிக்கும் பெவெர்லி ஹெவின்ஸ்.

இது குறித்து சம்பந்தப்பட்ட வீட்டாரிடம் பேசினால் மருத்துவ பயன்பாடுகளுக்காக கஞ்சா வளர்ப்பதற்கு ஹெல்த் கனடாவிடமிருந்து இரு உரிமங்களைப் பெற்றுள்ளதாகக் கூறுகின்றனர். இது அப்பகுதியில் வசிக்கும் மக்களிடையே பெருங் கூச்சல் குழப்பத்தினையும் ஏற்படுத்தி வருகிறது. கஞ்சாவினை சுத்தமாக்குவதற்காக இக்குடும்பத்தினர் தங்கள் வீட்டின் கொள்ளைப்புறத்தில் அதனைப் போட்டு எரிக்கும் போது ஏற்படும் கொடிய நெடி தங்களை வெறுப்பூட்டுவதாக உள்ளது என்கின்றனர் அண்டை வீட்டார்.

இந்த விடயம் குறித்து அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் பலமுறை காவல்துறை அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளனர் என்ற போதிலும் கூட அக்குடும்பத்திடம் சட்டப்படியான உரிமம் இருப்பதால் தங்களால் நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது என கையை விரித்து விட்டனர் அதிகாரிகள்.

வேறு வழியின்றி தற்போது அக்கம் பக்கத்தில் உள்ளோர் 300 பேரின் கையெழுத்துடன் அண்டை வீட்டவரில் ஒருவரான டெர்ரி ராபின்சன் ஹெல்த் கனடாவிற்கு எதிரான மனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். கஞ்சாவை வீடுகளில் வளர்ப்பதற்கு ஹெல்த் கனடா அனுமதி அளிக்கும் பட்சத்தில் பிறருக்கு தொல்லையற்ற வகையில் அவை வளர்க்கப்படுகிறதா என்பதற்கான ஆய்வுகளை முறைப்படி ஹெல்த் கனடா மேற்கொள்ள வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் கஞ்சா தொடர்பாக 20,000 மருத்துவ உரிமங்களை ஹெல்த் கனடா வழங்கியுள்ளது. இவற்றில் 16,000 கஞ்சாவை வளர்ப்பதற்கான உரிமங்கள். இவற்றில் 75 உரிமங்கள் மட்டுமே ஹெல்த் கனடாவால் இதுவரையிலும் கண்காணிக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல தொழிலதிபர் செல்வா வெற்றிவேலின் HomeLife/Future Realty Inc.

10 வது ஆண்டு விழா கோலாகலம்

Sick Kids மருத்துவமனைக்கு $11,151.61 டொலர்கள் நன்கொடை கையளிப்பு



செல்வா வெற்றிவேல் தலைமையிலான ஹோம் லைப் ஃபியூச்சர் ரியல்ரி இங்க் (Homelife /Future Realty Inc.) நிறுவனம் துவங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைத் தொடர்ந்து இந்நிறுவனத்தின் 10 வது ஆண்டு விழா நேற்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திறந்த வெளிப் பெரும் விருந்துடன் (Barbecue) தொடங்கிய இந்நிகழ்வில் இந்நிறுவனக் கூட்டமைப்பின் கீழ் இயங்கும் 240 க்கும் மேற்பட்ட வீடு விற்பனை செய்யும் முகவர்களும் பங்கு பெற்றார்கள்.



இந்நிறுவனத்தின் 10வது ஆண்டு விழாவினை முன்னிட்டு நோய்வாய்ப்பட்ட குழந்தை களுக்கு மருத்துவ சேவைகளை அளித்து வரும் சிறுவர் மருத்துவமனையான ரொறொண்ரோ சிக் கிட்ஸ் (Sick Kids) மருத்துவமனைக்கு $11,151.61 டொலர்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். மிகச் சிறந்த அனுபவமும், திறமையும் கொண்ட தொழிலதிபர் செல்வா வெற்றிவேல் அவர்களின் வழிகாட்டல் மூலமாக கனடிய தமிழ் சமுதாயம் ஏராளமான நன்மைகளைப் பெற்றுள்ளதுடன் , சமுதாயத்தின் பொருளாதார உந்து சக்திக்கும் காரணமாக இருந்தவர் என்பதை நிகழ்ச்சியில் பங்கேற்ற முகவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

விசேட அழைப்பாளராக ஹோம் லைப் நிறுவனர் Andrew Cimerman அவரது குடும்பத்துடன் விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். மேலும் இந்நிறுவனம் கடந்த ஆண்டில் கனடாவின் சிறந்த வீடு விற்பனை நிறுவனங்களில் ஆறாம் இடத்தைப் பிடித்ததுடன், 230 க்கும் மேற்பட்ட முகவர்களைக் கொண்ட ஒற்றைத் தரகரகம் என்ற சிறப்பினையும் பெற்றது.

செல்வ சமுதாயத்தில் 15 ஆண்டுகள் சிறந்த சேவை ஆற்றியமைக்காக ஒன்றாரியோ அரசினால் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் சிறந்த தன்னார்வ சேவைக்கான விருது செல்வா வெற்றிவேலுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.





பீல் பகுதி நுளம்புகளில் வெஸ்ட் நைல் வைரஸ் இருப்பது கண்டுபிடிப்பு நுளம்பு கடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளுமாறு மக்களுக்கு சுகாதாரத் துறை வேண்டுகோள்

பீல் பகுதியில் காணப்படும் நுளம்புகளில் வெஸ்ட் நைல் வைரஸ் இருப்பது ஆய்வகத்தில் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வக சோதனைகளுக்காக மிஸ்ஸிசாகா மற்றும் ப்ரோம்ப்டன் நகரில் சேகரிக்கப்பட்ட நுளம்பு மாதிரிகளில் வெஸ்ட் நைல் வைரஸ் இருப்பதை அப்பகுதி அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வெஸ்ட் நைல் வைரஸ் காலகட்டம் தொடங்கி விட்டதை தொடர்ந்து கடந்த வாரம் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் ரொறொன்ரோ நகர நுளம்புகளில் வெஸ்ட் நைல் வைரஸ் இருப்பதை அறிய முடிந்தது. ரொறொன்ரோவின் நகர்ப்புறப் பகுதிகளான பீல் பகுதியில் எப்போதும் நுளம்புகள் அதிகம் காணப்படும் என்பதாலேயே நேற்று இப்பகுதிகளில் காணப்பட்ட நுளம்புகள் சோதிக்கப்பட்டன.

நுளம்பு பரப்பும் வெஸ்ட் நைல் வைரஸ், நாம் நினைப்பது போல் அவ்வளவு சாதாரணமானதல்ல. உயிருக்கே உலை வைக்கும் அளவுக்கு கொடூரமானது. இந்த நுளம்புவின் மூலம் பரவும் வைரஸால், ஒட்டுமொத்த நரம்பு மண்டலமும் செயலிழந்து போய் உயிரே போய் விடும் வாய்ப்புக்கள் உள்ளன.

கடந்த வருடங்களிலும் இதே காலங்களில் கனடாவில் நுளம்புகளிடமிருந்து வெஸ்ட் நைல் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களாகவே ஆய்வகங்களில் பல வகையான நுளம்புக்களையும் பிடித்து ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்த வாரம் நடத்தப்பட்ட சோதனையில் நுளம்புக்களில் வெஸ்ட் நைல் வைரஸ் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இதனை முன்னெச்சரிக்கையாகக் கொண்டு நுளம்புக்கடியிலிருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதுடன் , வீட்டைச் சுற்றியுள்ள இடங்களிலும் தண்ணீர் தேங்காமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என ரொறொண்ரோ சுகாதார அதிகாரி டாக்டர். ஹேறாவர்ட் ஷாபிரோ எச்சரித்துள்ளார்.

நுளம்பு கடிக்காமல் தடுக்க சில பாதுகாப்பு நடைமுறைகள் :

ஹெல்த் கனடாவால் அங்கீகரிக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு மருந்துகளை மட்டும் பயன்ப்டுத்துங்கள் .

லேசான நிறமுடைய ஆடைகளை அணிவது மற்றும் நுளம்புக்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளை மூடி வைப்பது.

அதிகாலைப் பொழுதிலும் , மாலை வேளையின் துவக்கத்திலும் அதிக முன்னேற்பாட்டுடன் இருப்பது அவசியம். இந்த நேரத்தில் நுளம்புக்கள் மிக வீரியத்துடன் இருக்கும்.

வீட்டைச் சுற்றிலும் உள்ள இடங்களில் தண்ணீர் தேங்கியிருந்தால் அதனை அகற்ற வேண்டும்.

அதிகரித்து வரும் வேலையில்லா இளையோர்களின் எண்ணிக்கையால் பேராபத்து

- எச்சரிக்கிறது OECD

வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் வேலையில்லாமல் இருக்கும் இளையோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், உடனடியாக இதற்கு தீர்வு காணும் முயற்சியில் அந்தந்த நாட்டு அரசுகள் இறங்க வேண்டும் எனவும் எச்சரித்துள்ளது சர்வதேச பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிறுவனம். பாரிசை மையமாகக் கொண்டு இந்நிறுவனம் சமீபத்தில் இது தொடர்பில் ஆய்வொன்றை நடத்தியுள்ளது. இந்த ஆய்வின் மூலம் திடுக்கிடும் சில தகவல்கள் தெரிய வந்துள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உள்ள நிலையில் சமீப காலமாகவே நாட்டின் பொருளாதாரத்தினை மிரட்டும் வகையில் வேலையில்லாத இளையோர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது என்றும், இதனால் இளையோர்கள் பலர் நம்பிக்கை இழந்து தங்கள் எதிர்காலம் குறித்த அச்சத்தில் உள்ளனர் என்பதும் இந்நிறுவனம் வெளியிட்டுள ஆய்வு முடிவுகளில் கூறப்பட்டுள்ளது.

முக்கியமாக கிரீஸ் , ஸ்பெயின் ஆகிய நாடுகளில் வேலையில்லாமல் வாடும் இளையோர்களின் எண்ணிக்கை 50 சதவீதமாக உயர்ந்து வருகிறது எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பார்க்கப் போனால் கனடாவில் உள்ள வேலையில்லா இளையோர்களின் எண்ணிக்கை குறைவே என்றும் எதிர்வரும் 2013 ல் இது மேலும் குறைந்து 6.4 விழுக்காடு என்ற நிலையை அடைந்து விடும் என்பதால் வேலையில்லா திண்டாட்டத்தினை குறைப்பதில் கனடிய அரசின் செயல்பாடுகளை பாராட்டியுள்ளது இந்நிறுவனம்.

நன்றியை வலியச் சென்று கேட்கிறார் குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி



அகதி மக்களுக்காக மருத்துவத் திட்டங்களில் மாற்றம் கொண்டு வந்தமைக்காக கனடிய மக்கள் தனக்கு நன்றி கூற வேண்டும் என மக்களிடம் மன்றாட ஆரம்பித்துள்ளார் குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி. நன்றி சொல்வதற்கான வாசகங்களுடன் கூடிய விண்ணப்பப் படிவத்தினை தன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளார் ஜேசன் கென்னி.

" அகதி மக்களுக்கென இடைக்கால சுகாதார திட்டங்களை கொண்டு வந்து அதன் மூலம் வரி செலுத்தும் கனடிய மக்களும், புதிய கனடியர்களும் பயன் பெரும் வகையிலான மாற்றங்களைக் கொண்டு வந்ததற்கு நாங்கள் குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னிக்கு நன்றி கூறுகிறோம் என்பது உள்ளிட்ட அமைச்சர் ஜேசன் கென்னியின் விளக்கங்களை மக்கள் அங்கீகரிப்பது போன்ற வாசகங்கள்" இதில் இடம் பெற்றுள்ளன. குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னியின் இணையதளமான jasonkenney.ca வில் இந்த நன்றி மனு இடம் பெற்றுள்ளது.

ஒரே நகரம் போக்குவரத்து திட்டத்தினை நிராகரித்தது மாநகர சபை



ரொறொண்ரோ . போக்குவரத்து கழகத்தின் தலைவர் கரேன் ஸரின்ட்ஸ் கொண்டு வந்த ஒரே நகரம் போக்குவரத்து திட்டம் மாநகர அவையில் பெருந்தோல்வியை சந்தித்துள்ளது. இது தொடர்பில் நேற்று மாநகர அவையில் நடைபெற்ற வாக்குப் பதிவில் ஒருவர் மட்டுமே இதற்கு ஆதரவாக் வாக்களித்தார். மீதமுள்ள 48 நகரசபைத் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்த தால் இத்திட்டம் அடியோடு புதைக்கபப்ட்டு விட்டது. இத்திட்டம் ஏற்கனவே கடந்த மாதம் குயின்ஸ்பார்க்கில் கொண்டு வரப்பட்ட போது ஒன்றோரியோவின் போக்கு வரத்து அமைச்சர் உட்பட பல அரசியல்வாதிகளும் அதனை எதிர்த்தனர்.

வாக்கெடுப்பிற்குப் பின்னர் மாநகர அவையில் பேசிய மாநகர முதல்வர் றொப் போர்ட், கரேன் ஸரின்ட்ஸின் ஒரே நகரம் போக்குவரத்து திட்டம் உயிரற்றுப் போய் விட்டதென்றும், சில வாரங்களுக்கு முன்னர் இத்திட்டம் குறித்து ஊடகங்களில் வெளியான வண்ண வரைபடங்கள் தவிர வேறந்த சிறப்பும் இத்திட்டத்திற்கு இல்லை என்றும் மகிழ்ச்சியுடன் கூறினார்.

வாக்கெடுப்பிற்குப் பின்னர் ஒரே நகரம் திட்டத்தினை எதிர்த்துப் பேசிய போர்டின் சகோதரர் டௌக் போர்ட், மக்கள் விரும்பும்படியானதொரு தடவழிப் பாதை திட்டத்தினை விரைவில் மீண்டும் மாநகர முதல்வர் றொப் போர்ட் முன் மொழிவார் என உறுதியளித்தார். ஆனால் இதற்கு மேயர் தரப்பில் இருந்து எந்த பதிலும் வரவில்லை.

கடந்த முறை ஷெப்பர்ட் சுரங்க வழி போக்குவரத்து திட்டத்தினை போர்ட் மாநகர அவையில் கொண்டு வந்த போது ரொறொண்ரோ போக்குவரத்து கழகத்தின் தலைவர் கரேன் ஸரின்ட்சுடன் இணைந்து அதனை எதிர்த்த நகர சபைத் தலைவர்களும் தற்போதைய ஒரே நகரம் போக்குவரத்து திட்டத்தினை அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

Homelife Future Realty Inc., Brokerage

10th Anniversary

















Supporting the Community

HomeLife/Future Realty did a Fundraising in support of SickKids Foundation, raised

$11,221.61 on their 10th Year Anniversary.

*Homelife/Future Realty Inc., Brokerage**

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229

* Independently Owned and Operated,

தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

inayam

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

***inayam**.net* மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே ***inayam**.net*இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது. இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே *www.**inayam**.net*

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்



www.inayam.net

info@inayam.net

416.400.6.406

www.fortunecomputer.com

Fortune Computers

DEALS THAT NEVER END

JULY 13TH TO JULY 19TH

App Store

Download Our Free App

FIRST COME FIRST SERVE

- 6FT HDMI Cable — $1.09
- Headset with Microphone — $3.99
- Wall Mount up to 63" — $17
- 16GB USB Drive — $8.99
- 2GB Micro SD Card — $2.99
- 15.6" Laptop Bag — $7.99
- 32" LCD TV (AOC, REFURBISHED) — $219
- 8 Bay HD Antenna (HDTV) — $29
- Windows 7 Home Premium — $89
- Canon MG2120 INKJET PRINTER PRINT/COPY/SCAN — $37
- 50FT Ethernet Cable — $4.99
- 6FT VGA M-M — $2.99
- 320PCS CD/DVD Wallet — $8.99
- 9.8" Android 4.0 - FULL HD TABLET — $249
- MK260 Wireless Keyboard & Mouse Combo — $19.99
- 50PK DVD-R — $7.49
- LED Monitor (Samsung, 27") — $269
- 9" Portable DVD Player (REFURBISHED) — $53
- Media Player with HDMI Output — $23
- Pixma Wireless MX432 SCAN/COPY/PRINT/FAX — $64
- Blu-Ray Player (Panasonic, REFURBISHED) — $54.99
- 10/100 Ethernet Card — $3.99
- 1TB USB 3.0 Portable Hard Drive — $105

IBM T41 (Intel P4 1.7GHZ, 40GB HD, 1GB DDR 400)
- DVD-ROM
- WiFi Ready
- Windows XP COA

REFURBISHED — $137

HP 635 (HP 635, 320GB HD, 4GB DDR3)
- 3D Sound
- 10/100 LAN Ready
- WIFI Ready
- LightScribe DVD-RW +/-
- WIN 7 HP
- Web Camera
- HDMI Out

$389

Lenovo G570 (Intel i5 2.5GHZ, 500GB HD, 4GB DDR3)
- HDMI
- Card Reader
- DVD-RW +/-
- WIN 7 HP
- HD Web Camera
- 64 bit
- Factory Refurbished with 1 Year Manufacturer's Warranty

$589

BARE BONE SYSTEMS A (AMD X4 QUAD CORE, 4GB DDR3)
- 64 MB Video O/B
- 3D Sound
- 10/100 Ethernet Ready
- 500W ATX Midtower
- 22x DVD-RW DL +/-

$259

BARE BONE SYSTEMS B (INTEL CORE I3 540, 4GB DDR3)
- 512MB Video
- 3D Sound
- 10/100 Ethernet Ready
- 500W ATX Midtower
- 22X DVD-RW DL +/-

$299

SYSTEM UPGRADES — Norton — $12.99

Intel Core 2 Duo 2.13GHZ, 80GB HD, 2GB DDR2
- DVD-ROM
- 10/100 Ethnet Ready
- Windows 7 HP with CD

REFURBISHED — $169

8 Port Switch 10/100 — $9.99

Dell Intel 3.4GHZ Dual Core (1GB, 80GB HD, DVD-ROM) — $99

55" LED Full HD TV (REFURBISHED, TruMotion 120Hz) — $799

Portable Air Conditioner 10,000 BTU — $229

Popcorn Maker — $19

Wireless N300 Router (BELKIN) — $22.99

Portable Air Conditioner 14,000 BTU — $369

MONEY MISER
INTEL E5700
500GB Hard Drive
4GB DDR3
- 5.1 Sound
- 128 MB Video
- 10/100 Network
- 500W ATX Midtower
- 24X DVD-RW +/-
- Keyboard & PS2 Mouse
- WIN 7 HP

$499

MR. POPULARITY
Intel Core I3 560
1TB 5900 RPM
8GB DDR3
- 5.1 Sound
- 1GB Graphics
- 500W ATX Midtower
- 24X DVD-RW +/-
- Wireless Keyboard & Mouse Combo
- WIN 7 HP

$649

RAGU ZONE
INTEL Core i5 2310
1TB 7200 RPM
8GB DDR3
- 1GB Graphics with HDMI/DVI out
- 5.1 Sound
- 10/100 LAN
- 500W ATX Midtower
- 24 X DVD-RW +/-
- Wireless Keyboard & Mouse Combo
- WIN 7 HP

21.5" LED Monitor — $839

INFORMATION HIGHWAY
Intel Core i7 2700K
2TB Hard Drive
16GB DDR3
- 1GB Graphics with HDMI out
- 3D Sound
- 10/100 LAN
- 500W ATX Midtower
- Bluray Writer
- Wireless Keyboard & Mouse Combo
- 7.1 Sound
- WIN 7 HP

27" LED Monitor — $1399

REGULAR STORE HOURS:
MON - FRI: 10am - 7:30pm
SATURDAY: 10am - 7pm
SUNDAY: 11am - 6pm

TORONTO
280 COLLEGE ST
416-324-9426
(SPADINA / COLLEGE)

SCARBOROUGH
1274 KENNEDY RD
416-751-8810
(ELLESMERE / KENNEDY / LAWRENCE)

CONCORD
2180 STEELES AVE W
905-532-0067
(KEELE / STEELES)

MARKHAM/ SCARBOROUGH
3331 MARKHAM RD
416-335-3433
Orange Building
(STEELES / MARKHAM)


IDEAL
Flooring Centre
KITCHENS & BATHS
MARKHAM & DENISON
sale
GREAT SAVINGS!
While Quantity Lasts
starting from $3.49 /sq.ft.
OAK HARDWOOD
starting from $1.99 /sq.ft.
FREE INSTALLATION
CARPET
starting from $1.29 /sq.ft. 12.3mm
LAMINATE
starting from $1.29 /sq.ft.
TILES
• Full Basement
• Painting • Carpet
• Stairs • Tiles
• Granite • Marble
COMPLETE RENOVATION
CALL FOR DETAILS
Hardwood
Laminate
Vinyl
20% OFF
INSTALLATION
IDEAL FLOORING CENTRE (Markham & Denison)
7200 Markham Rd, Unit 2, Markham, ON L3S 3R7
Fax: 905-201-5969 | Tel: 905-201-6900 | Cell: 416-937-8009
Kiruba Mahendran
Owner & Operator


AROUND THE WORLD WITH
SERANDIB
FLY DIRECT TO JAFFNA WE PROVIDE JAFFNA TICKETS
Manasarovaer Tour
The Spiritual Tour to the Roof Top of the World
Kailash Yaathra
From June 2012 to Aug 2012
Serandib Travel 1
SUITE 207- 7 EASTVALE DR, MARKHAM, ON L3S 4N8
Tel: 416 750-0009 Canada Toll Free: 1800 207 0902
618 GOYEAU STREET #2A WINDSOR Tel: 519-977-1234
Montreal : 514 448 1389, Calgary : 403 770 9647, Ottawa: 613 482 6590,
Vancouver : 604 625 0495, Mississauga : 905 564 7564, Markham : 905-472-7500
New York : 716-408-0342
Los Angeles : 213-254-0119
New Jersey : 732-783-1513
Washington : 202-517-0139
Honolulu : 808-457-1730
Miami : 305-625-4102
Chicago : 312-625-1420
Detroit : 313-263-0610
OUR CHENNAI OFFICE 23 NOOR VEERA SAMY LANE NUNGAMBAKKAM CHENNAI 600 034. Tel: 044-43596232 044-28266233
Web: www.serandibtravel.com
Lankan
Emirates
ETIHAD
BRITISH AIRWAYS
QATAR
JET AIRWAYS
GULF AIR
KUWAIT AIRWAYS
IATA
tico.ca

சிறுவயதில் குழந்தைகளை அடித்தால் மனநிலை பாதிக்கப்படும் அபாயம்

சிறுவயதில் அதிகமாக அடித்து வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு பெரியவர்களான பின்னர் மனநிலை பாதிக்கப்படும் அபாயம் அதிகமாக உள்ளது ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத் தபட்டுள்ளது. சிறுவயதில் அடித்தாலோ அல்லது கடுமையான உடல் தண்டனைகளை அளித்தாலோ அந்த குழந்தைகள் பருவ வயதை எட்டிய பின்னர் மனநிலை பாதிக்கப்படுவதற்கான் அபாயம் பிறருடன் ஒப்பிடும் போது 7 சதவீதம் அதிகம் என்கிறார் மனிடோபா பல்கலைக்கழக பேராசிரியர் ட்ரசி அபி. சமூக உடல்நல அறிவியல் துறையில் பணியாற்றி வரும் இவர் தான் மேற்கொண்ட ஆராய்ச்சியின் மூலம் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

கோள் எடுத்தால் குரங்கும் ஆடும்!

அடியாத மாடு படியாது!

அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்!

அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்!

இது போன்ற பல பழமொழிகள் தமிழில் உண்டு. இதையெல்லாம் பயன்படுத்த நினைத்தால் ஆரம்பத்தில் பயத்தினால் குழந்தைகள் கட்டுப்படுவது போன்று தோற்றமளிக்கும். நாட்கள் செல்லச் செல்ல இது குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதிந்து கோபம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளைத் தூண்டி விடும். இதனால் சில குழந்தைகளுக்கு நம்மை விட சிறியவர்களை நாம் அடித்தால் தவறில்லை என்ற நினைப்பும், சற்று வயது வந்த சிறுவர்களுக்கு அதிகப்படியான கோபத்தை உண்டாகி தவறான வழிகளுக்கு செல்லவும், வெறுப்பினால் விரக்தியடைந்த குழந்தைகள் சில பெரியவர்களான பின்னர் மனநிலை தடுமாறவும் வாய்ப்புக்கள் அதிகம்.

எனவே பெரியோர்களே குழந்தைகளை அன்பால் தண்டியுங்கள்!!

நீரழிவு நோய் மருந்துகளை எடுத்துக் கொண்டால் மூளைப் பாதிப்பு குணமாகுமாம்!

சொல்கிறது புதிய மருத்துவ ஆராய்ச்சி



இரண்டாம் வகை நீரழிவு நோயை குணப்படுத்த பொதுவாக பயன்படுத்தப்படும் மருந்துகளில் ஒன்றான மெட்போர்மினை எடுத்துக் கொண்டால் மூளைப் பாதிப்புக்கள் குணமாவது உறுதி என அடித்துச் சொல் கின்றனர் ரொறொண்ரோ ஆராய்ச்சி யாளர்கள். இந்த வகை மருந்துகள் ஸ்டெம் செல்கள் என அழைக்கப்படும் அடிப்படிக் கலங்களைத் தூண்டி விட்டு புதிய மூளை அனுக்கள் உருவாக காரணமாக இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய நரம்புக் குறைபாடு நோய்களாக கருதப்படும் முதமை யில் ஏற்படும் அல்சிமர் போன்ற நினைவாற்றல் இழப்பு நோய்களைக் கூட இந்த மருந்து குணப் படுத்துகிறதாம்.

ரொறொண்ரோ குழந்தைகள் மருத்துவமனையில் (Toronto's Hospital for Sick Children) பணியாற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களே இதனை நிருபித்துக் காட்டியுள்ளனர். மெட்போர்மின் மருந்தினை உட் கொண்டவுடன் புதிய நியூரான்களை உண்டாக்குவதற்கான சமிக்கை ஸ்டெம் செல்களுக்கு இடப்படுகிறது என்றும் உடனடி யாக பல புதிய மூளை அனுக்கள் உருவாக்கப் படுவதாகவும் இவர்கள் விளக்க மளித்துள்ளனர்.

தற்போது சிகிச்சைகளே இல்லை என கைவிரிக்கப்பட்ட பல மூளை சம்பந்தமான குறைபாடுகளையும் இந்த மருந்தினை கொண்டு குணப்படுத்தி விடலாம் என்கிறார் பிரதான ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான பிரேதா மில்லேர்.

அட்கின்ஸ் வகை உணவினை உட்கொள்ளும் பெண்களுக்கு மாரடைப்பு அபாயம் அதிகம்

புதிய மருத்துவ ஆராய்ச்சி

அட்கின்ஸ் எனப்படும் குறைந்த கார்போஹைட்ரேட்டும், கூடிய புரதச் சத்து நிறைந்த உணவினை உட்கொள்ளும் பெண் களுக்கு மார்படைப்பு வருவதற்கான வாய்ப் புக்கள் அதிகம் என புதிய மருத்துவ ஆராய்ச்சி யொன்றில் கூறப்பட்டுள்ளது. எடையைக் குறைப்பதற்காக இது போன்ற உணவு வகை களை அதிகம் எடுத்துக் கொள்ளும்படி மருத்துவர்கள் சிபாரிசு செய்கின்றனர். சமீப காலமாகவே பெண்கள் எடையைக் குறைப்பதற்கான முயற்சிகளில் அதிக நாட்டம் காட்டி வருவதால் அட்கின்ஸ் வகை உணவினை உட்கொண்டு வருகின்றனர்.

இதற்காக இயல்பான உணவு உட்கொள்ளும் பழக்கமுடையோரையும், அட்கின்ஸ் வகை உணவினை உட்கொள் வோரையும் வைத்து நடத்தப்பட்ட ஆய்வில் அட்கின்ஸ் உணவு முறையை பின்பற்றும் பெண் களில் அதிகப்படியானோர் இருதய நோய் களால் பாதிக்கப்பட்டிருந்ததாக ஆராய்ச்சியா ளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். குறிப்பாக இளம்பெண்கள் அதிகப்படியானோர் எடை யைக் குறைக்கும் நோக்கில் இது போன்ற உணவு வகைகளை உட்கொண்டதால் இருதய நோய்க்கு ஆளானதும் ஆராயச்சியில் கூறப்பட்டுள்ளது.

ஏதென்ஸ் பகோனா லஜியோ மருத்துவப் பல் கலைக்கழகம் (Pagona Lagiou of the University of Athens Medical School) மேற்கொண்டிருந்த இந்த ஆராய்ச்சி தொடர் பான கட்டுரையை பிரித்தானிய மருத் துவ (British Medical Journal) வாரப்பத்திரிக் கை வெளியிட்டுள்ளது.

குறைந்த கார்போஹைட்ரேட் - அதிக புரத வகை உணவுகள் மிகச் சத்தானவையே என்பதில் எந்த மாற்றங்களும் இல்லை என்ற போதிலும் கூட புரத உணவுகளை அதிகம் உட்கொண்டு கார்போஹைட்ரேட் பற்றாக் குறை ஏற்படும் போது அவை இதயத்தில் கொழுப்பாகச் சேர்ந்து மாரடைப்பை ஏற்படுத்து வதாக ஆராயச்சியாளர்கள் வருணித்துள்ளனர். எடையைக் குறைக்கிறோம் என்ற பெயரில் தினமும் ஒரு சிறிய ரொட்டித் துண்டினையும், அவிக்கப்பட்ட முட்டையையும் மட்டுமே சாப்பிடுவோருக்கு மார்படைப்பு ஏற்படுவதற் கான வாய்ப்பு 5 சதவீதம் அதிகம் என்கிறது ஆராய்ச்சி.

ரொறொண்ரோ தொழில் அபிவிருத்தி மையத்தின் ஒன்றாரியோ சுய வேலைவாய்ப்பு நலன் செயல்நிரல்

(Ontario Self-Employment Benefit Program) தகவல் அமர்வு ஒகஸ்ட்டில் தொடங்குகிறது ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ள அழைப்பு

புதிதாக தொழில் தொடங்குபவர்களுக் கான தொழில் ஊக்குவிப்பு தகவல் அமர்வு நிகழ்ச்சி, ரொறொண்ரோ தொழில் அபிவிருத்தி மையத்தின் சார்பில் எதிர்வரும் ஒகஸ்ட் 7ம் திகதி 1 Yonge St. 900ல் நடைபெற உள்ளது. தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்கள் இதில் கலந்து கொண்டு பயன் அடையலாம். இந்த தகவல் அமர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் 416.345.9437 என்ற தொலைபேசி இலக்க எண்ணை அழைத்து பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

உலகத் தரத்திலான பல சுய வேலைவாய்ப்பு குறித்த தகவல்களை இந்த நிகழ்ச்சியின் மூலம் அறிந்து கொள்ள முடியும். புதிதாக தொழில் தொடங்க விரும்புவோர் அனைவரும் இதில் பங்கு பெறத் தகுதியானவர்களே. தொழில் தொடங் குவதில் ஆரம்பித்து இ அபிவிருத்தி உள்ளிட்ட பல நிலைகளிலும் தொழில் முனைவோருக்கு ரொறொண்ரோ தொழில் அபிவிருத்தி மையம் பல்லாண்டு காலமாக சேவையாற்றி வருகிறது. இந்த மையம் 1990ல் தொடங்கப்பட்டது. இதுவரை யிலும் 4500க்கும் மேற்பட்ட தொழில்கள் உருவாக உறுதுணை யாக இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும் தெரிகிறது.

The Amazing Spider-Man

– திரை விமர்சனம்



புதிதாக வந்திருக்கும் The Amazing Spider-Man படத்திற்கு The Acceptable Spider-Man. The Adequate Spider-Man என்ற இரண்டு பெயர்களுமே பொருத்தமானதாக இருந்திருக்கும் என்றே தோன்றுகிறது. பொதுவாகவே ஸ்பைடர் மேன் உள்ளிட்ட சூப்பர் ஹீரோ கதைகளைக் கொண்ட திரைப்படங்கள் பிரபலமாகக் காரணம் அதில் இருக்கும் பிரமிப்பு தான். நாம் சிறு வயதில் விரும்பி படித்த கொமிக்ஸ், மாயாவி கதைகளில் உள்ள விறுவிறுப்பும், பிரமாண்டமும் ஸ்பைடர் மேன் படத்தில் சிறிதும் குறையவில்லை. இது வரை ஸ்பைடர் மேனின் 3 பாகங்கள் வெளி வந்து விட்ட பின்னரும் கூட எத்தனை முறை பார்த்தாலும் சலிப்புத் தட்டாத வகையில் திரைக்கதையை உருவாக்கியுள்ளதே அமெரிக்க திரைக்கதை எழுத்தாளர்களின் சிறப்பு.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் திரைக்கதையில் ஸ்பைடர்–மேனின் தந்தை ஒரு விஞ்ஞானியாக பணிபுரிகிறார். ஊனமில்லாத உலகை உருவாக்க வேண்டும் என்பதே அவரின் கனவு. இதற்காக பல ஆராய்ச்சிகளை அவர் மேற் கொள்ள அது தோல்வியில் முடிந்து விடுகிறது. தன் ஆராய்ச்சியினை வேறு யாரும் தொடர்ந்து விடக் கூடாது என எண்ணும் ஸ்பைடர்–மேனின் தந்தை ஆராய்ச்சி ஆவணங்கள் சிலவற்றை அழித்து விடுகிறார். இருப்பினும் எப்படியும் இந்த ஆராய்ச்சியினை செய்து முடித்தே தீர வேண்டும் என்ற உந்துதல் அவர்கள் தொடர்வதால் தனிமை யில் ஆராய்ச்சியினை தொடர்ந்து செய்வது என முடிவெடுத்து மகனை மாமாவின் பாதுகாப் பில் விட்டு விட்டு எங்கேயோ சென்று விடுகிறார்.

அத்தை , மாமாவுடன் அவர்கள் வீட்டில் ஸ்பைடர்–மேன் வளர்கிறான். திடீ ரென ஒரு நாள் கிட்டங்கிக்குச் செல்லும் ஸ்பைடர் மேன் அங்கு ஒரு பெட்டியை பார்க் கிறான். அதில் ஸ்பைடர்–மேன் தந்தை செய்த பழைய ஆராய்ச்சியின் ரகசியங்கள் சில கிடைக்கிறது. ரகசியங்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கல்லூரி உள்ளிருப்பு பயிற்சிக்காக செல்வதாகக் கூறிவிட்டு OSCORP ஆராய்ச்சி கூடத்திற்கு செல்கிறார் கதாநாயகன். சோதனைக்கூட ஆராய்ச்சியின் போது ஒரு சிலந்தி கதாநாயகனைக் கடித்து விடுகிறது. உடனடியாக சிலந்தி மனிதனா கிறார் கதாநாயகன்.

இதற்கிடையே திடீரென தன் தந்தையின் நண்பர் ஒருவரை திடீரென சோதனைக் கூடத்தில் சந்திக்கும் வாய்ப்பும் ஸ்பைடர் மேனுக்கு கிடைக்கிறது. அவரிடம் பேசிப் பழகுகிறான் கதாநாயகன். இருவரும் இணைந்து ஆராய்ச்சியினை தொடர்கிறார் கள். ஆராயச்சியின் சில குழப்பங்களுக்கு விடையும் கிடைக்கிறது. ஒரு பல்லியின் மரபணுவை கால் ஊனமான எலியிடம் செலுத்தி கால் முளைக்க வைத்து வெற்றி காண்கிறார்கள். இச்சோதனையை மனிதர்க ளிடம் செய்து பார்க்கலாம் என மேலிடம் சொல்கிறது. ஆராய்ச்சி முழுமையடைய வில்லை என அவ்விஞ்ஞானி மறுக்கிறார். உடனடியாக வழக்கம் போல் மேலிடத்தின் உத்தரவிற்கு அடிபணியாத விஞ்ஞானி வேலையிலிருந்து நீக்கப்படுகிறார். இதில் வெறுப்படைந்த விஞ்ஞானி தனக்குத்தானே சோதித்துக்கொள்ள முடிவெடுக்கிறார். விளைவு விஞ்ஞானியை ராட்ஷதப்பல்லி யாக்கி விடுகிறது. தோழி Gwen Stacy–இன் நட்பும் காதலாக மாறுகிறது. ஆங்காங்கே காதல் .. பிரிவு என வழக்கம் போலவே கதை செல்கிறது.

பிறகென்ன ராட்சதப்பல்லி ஊரை ரணகளம் பண்ண கதாநாயகன் ஸ்பைடர் மேன் தடுப்பது தான் மீதி. பல்லியும் , சிலந்தியும் அமெரிக்காவை அச்சுருத்துகிறது. இரண் டையும் வலை வீசிப் பிடிக்க போலிசாக கதைக்குள் வருகிறார் கதாநாயகியின் அப்பா. இந்த நிலையில் முடிவு எவ்வாறு அமையப் போகின்றது என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விறுவிறுப்பாக நகர்கின்றது திரைக்கதை. நிச்சயமாக இது சிறார்களின் கவனத்தை ஈர்க்க கூடிய திரைப்படம்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க ஆண்டுக் கொருமுறை பலநூறு கோடிகளை தண்டம் செய்து எடுக்கப்படும் ஒரே மாதிரியான ஸ்பைடர் மேன் படங்களை நாமும் விட்டபாடில்லை. தொடர்ந்து சலிக்காமல் பார்த்து வருகிறோம். காட்சிகளில் கூட மாற்றமில்லாமல் இருப்பது தான் சலிப்பினை உண்டாக்குகிறது. வம்பிழுக்கும் சக மாணவனை திருப்பியடிப்பது, அதனால் கதாநாயகனுக்கு வரும் காதல், ஸ்பைடர் மேன் ஆனவுடன் தனியாக பயிற்சி எடுப்பது, இதற்கு நடுவிலேயே மாமாவை கொலை செய்தவரை பழிவாங்க கிளம்பி ஊரை காப்பாற்றுவது, இதில் அவ்வப்போது பஞ்ச் வசனம் வேற , காதலியை பிரிந்து விட்டு அழுவது. அரைத்த மாவையே மீண்டும் அரைத்திருக் கிறார்கள். அது மட்டுமன்றி பழைய ஸ்பைடர் மேன் படங்களில் வந்த அதே நிற அமைப்பு. இதையாவது மாற்றியிருக்கலாம்.


3D படம் என்பதால் திரையரங்கம் சென்றவுடன் அதற்கான கண்ணாடியை கொடுத்து விட்டு அதற்கு ம் சேர்த்து பல மடங்கு கட்டணத்தை உங்களிட மிருந்து கறந்து விடுவார்கள். இப்படத்தில் அமேசிங் என்பது 3D யில் படம் பார்ப்பது மட்டும் தான். நியுயார்க் நகரின் கண்ணைக் கிழிக்குமளவிற்கான கூர்மையான அடுக்குமாடிக் கட்டிடங்கள், தூசு துகள்கள் பறப்பது என 3D பட்டையக் கிளப்புது போங்க,

ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் 3D மட்டும் இல்லாவிட்டால் படம் வீண். எது எப்படியோ குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் பெற்றோரும் போய் பார்த்தால் 2 மணி நேரம் பொழுது போகும்.



e-குருவியும் சினிமாவும்

விலங்குகளின் வாழ்க்கையை சித்தரிக்கும் அருமையான திரைப்படம் மடகஸ்கார் 3



ஐரோப்பிய மண்டலத்தில் சிறுவர்கள் மட்டுமன்றி அனைவரையும் கவர்ந்து வருகிறது மடகஸ்கார் 3 திரைப்படம். ஏற்கனவே மடகஸ் கார் திரைப்படத்தின் இரண்டு பாகங்கள் வெளியாகி சிறுவர்களின் மனதில் இடம் பிடித் துள்ள நிலையில் அதன் மூன்றாவது பாகம் தற்போது வெளியாகியுள்ளது.

மடகஸ்கார் திரைப்படம் அசைவூட்டப் படங் களில் ஒன்று என்பதால் சிறுவர்கள் இதனை விரும்பி பார்த்த காலம் போய் தற்போது அனை வரையும் கவர்ந்து வருகிறது. நியூ யோர்க் மிருகக்காட்சி சாலையில் சிங்கம், குரங்கு, வரிகுதிரை, நீர்யானை என நட்பால் இணைந்த விலங்குகளின் வாழ்வில் நடக்கும் சுவாரஸ்ய சம்பவங்களின் தொகுப்பே மடகஸ்கார் ஆகும்.

பிரான்சில் முதலில் திரையிடப்பட்டதில் வசனத் தொகுப் பில் சில பிரச்சினைகள் எழுந்திருப்பதாகக் கூறுகின் றனர். மடகஸ்கார் — 3, திரையரங்குகளில் வெற்றி கரமாக ஓடிக் கொண்டிருக்கிறது



Varan Lingam

Linga Muthu

"மகிஷா" இசைத்துறையில் மட்டுமன்றி சகல துறைகளிலும்
மென்மேலும் பல சாதனைகள் செய்யவேண்டுமென வாழ்த்துவோமாக...

Tamilnathy

எனது முகநூல் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை என்று சாடை பேசிய ஒருவரை இன்று காலை நண்பர்கள் பட்டியலிலிருந்து நீக்கினேன். தொடர்பில் இல்லாத ஓராயிரம் பேரை நீக்க நினைத்திருக்கிறேன். நீக்கிக்கொண்டு போகும்போது பார்த்தால் எல்லோரும் தெரிந்தவர்களும் நண்பர்களுமாகவே இருக்கிறார்கள். என்னைப் பிடிக்காத அன்பர்கள், நண்பர்கள், இல்லாத கட்சியை இருப்பதாகப் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கும் அல்லக்கைகள் தாங்களாகவே தங்களை விலக்கிக்கொள்வது அவர்களது உள ஆரோக்கியத்திற்கு நல்லது

Juanita Nathan

Freedom comes at immense cost. We are still paying.... Today is a reminder of all the great sacrifices others had made in search of freedom for us. We should take a moment and reflect on the price we all have paid....and continue our search for freedom.

Ken Kirupa

CTCC's Next Golf Classic is scheduled for Sept 5th at the Deer Creek Golf Course in Ajax. Please call me at 416-830-8191 to reserve your four-somes. Sponsorship opportunities also available. Proceeds goes to Scaborough Hospital Foundation.

Kenga Kumaraswamy

Drieberg College Alumni Association of Canada is holding its Annual Summer Picnic and Sports Meet at Morningside Park in Scarborough, Ontario. Please note this in your calenders and contact for further information. Thank you

Praba Balakrishnan

TRUE FACT...
When People HURT You Over and Over... Think of them as SANDPAPER... They SCRATCH and HURT You... But In the End you are POLISHED... and They are all Used Up...

Sukeev Kailash

Work Life Balance and Time Management Workshop
Saturday, July 21 at 12:00pm at NAIPT Building, 5310 Finch Ave Ease, Unit #9 and 10

e-குருவியும் Facebookக்கும்

Jey Jeyakanthan

Good example of a Brain Study: If you can read and understand the following (in English) you have a strong mind:
7H15 M3554G3 53RV35 7O PR0V3 H0W 0UR M1ND5 C4N D0 4M4Z1NG 7H1NG5! 1MPR3551V3 7H1NG5! 1N 7H3 B3G1NN1NG 17 WA5 H4RD BU7 N0W, 0N 7H15 LIN3 Y0UR M1ND 1S R34D1NG 17 4U70M471C4LLY W17H 0U7 3V3N 7H1NK1NG 4B0U7 17, B3 PROUD! 0NLY C3R741N P30PL3 C4N R3AD 7H15. PL3453 F0RW4RD 1F U C4N R34D 7H15 :)..Thank you!

Neethan Shan

I'm thinking of organizing the Malvern Walk for Change during 3 days in the wk of Sept 3rd (probably 7th, 8th, 9th). Anyone willing to help?

Veluppillai Thangavelu

தமிழோடு ஆங்கிலத்தைக் கலந்து உரையாடுவது தமிழகத்தில் ஒரு புற்று நோயாக மாறியிருக்கிறது. எந்த ஊடகத்தை எடுத்துப் பார்த்தாலும் இதே நோயைப் பார்க்க முடிகிறது. விஜயா தொலைக்காட்சியில் கோடீசுவரர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் நடிகர் சூரியா 90 விழுக்காடு ஆங்கிலத்திலும் எஞ்சிய 10 விழுக்காடு தமிழிலும் பேசுகிறார். நிகழச்சியில் கலந்து கொள்பவர்களும் ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டுகிறார்கள். இந்த புற்றுநோய் கனடிய ஊடகங்களையும் பீடித்துள்ளது.

Nadarajah Muralitharan

கடந்த புதன் கிழமை கனடா ஐயப்பன் ஆலய மண்டபத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நா.உறுப்பினர் சிறிதரன் முஸ்லீம்கள் பற்றியும், யூதர்கள் தொடர்பாகவும் குறிப்பிட்ட கருத்துக்கள் என்னை மிகவும் பாதிப்புள்ளாக்கியிருந்தது. அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே குறுக்கிட்டு அவை தொடர்பாக சிறிதரன் அவர்களைக் கேள்வி கேட்க வேண்டுமென்று என் மனம் உந்தியது. ஆயினும் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் அவ்வாறு குறுக்கிடுவது கூட்டத்தைக் குழப்பத்துக்குள் கொண்டு சென்று விடும் என்று நினைத்ததனாலும் சபை நாகரிகம் கருதியும் அவ்வாறு என்னால் செய்ய முடியவில்லை. ஆயினும் கேள்வி நேரத்தில் இது பற்றிய கேள்விகளைக் கேட்கும் வாய்ப்பும் சிறிதரன் அவர்கள் உரை முடிந்து உடனே வெளியேறியதால் தவறிப் போய் விட்டது. எனவே இக்கருத்துக்கள் குறித்த எமது விமர்சனத்தை, எதிர்ப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்போடு, சிறிதரனோடு நாம் நிகழ்த்தியே ஆக வேண்டியுள்ளது. மற்றும் இவை பற்றி அக்கூட்டத்தில் பேசிய சேரன் அவர்கள் முகப்புத்தகத்தில் ஆங்கிலத்தில் எழுதியுள்ள குறிப்புக்கைளை கீழே தந்துள்ளேன். இக்கருத்துக்களோடு நான் முழுமையாக உடன்படுகின்றேன்.

Raoul Sivanathan

பொங்கும் ஆசை ஆற்றிலே நனைந்த தென்தன் உள்ளமே
எங்கும் இன்ப வெள்ளமே எழுந்து பாய்ந்து செல்லுமே

Perinpam



போர் எல்லாவற்றையும் எங்களிடமிருந்து எடுத்துச் சென்றிருக்கலாம். ஆனால் எங்கள் கல்விச் செல்வத்தை எங்களிலிருந்து பிரிக்கமுடியாது

- மருத்துவர் சத்தியமூர்த்தி -

போரினால் எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டிருக்கலாம் நிறுவனங்கள, உடமைகள் அழிக்கப்பட்டிருக்கலாம், போர் எல்லாவற்றையும் எங்களிடமிருந்து எடுத்துச் சென்றிருக்கலாம், அப்பாவி மக்கள் மீது வடுக்களையும் பெருங் காயங்களையும் உண்டாக்கியிருக்கலாம், ஆனால் எங்களது சொத்தான திறமையை அறிவை எடுத்துச் செல்லமுடியாது எங்கள் கல்விச் செல்வத்தை எங்களிலிருந்து பிரித்துச் செல்லமுடியாது என இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த வவுனியா மருத்துவமனை மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவிருத்திருக்கின்றார்.

கடந்த யூன் 23 ஆம் திகதி கல்வி கனக்சனால் ஸ்கார்பறோ கொன்வன்சனல் மண்டபத்தில் கிளிநொச்சிக் கல்வி வளர்ச்சி அறக்கட்டளைக்கு நிதியுதவி செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட இராப்போசண நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இறுதி யுத்த கட்டங்களில் வன்னியின் கடைசி பொது மருத்துவமனையை சுற்றி மிக நெருக்கமாக தொகை தொகையான இருந்த மக்களின் உணர் வுகளைப் பற்றி நான் என்ன கூற முடியும் அந்த போர் சுழலில், தொடர்ச்சியான குண்டுச் சத்தங்க ளின் மத்தியில, மக்களின் கதறலுக் குள் அசைமுடியாத அந்த குறுகிய நிலபரப்புக்குள் சுற்றிலும் இறந்த உடலங்களும் இரத்த வாடை வீசும் அந்த சூழலில் மீண்டும் வாழும் போது தான் ஏற்பட்ட ஏற்பட்ட வீரக்கத்தி, மனவழுத்தம், இயலாமை போன்ற உணர்வுகளை வெளிப் படுத்த முடியும் என உணர்வின் விளிப்பிலிருந்து தெரிவித்தார்.

அனைத்தையும் இழந்த எமது உறவுகளுக்கு தற்போதுதேவையனாவை இரண்டு விடயங்கள் ஒன்று மருத்து வசதிகள், மற்றையது கல்வித் தொடருவதற்கான உதவி என்று குறிப்பிட்ட மருத்துவர், கல்வியைத் தொடர்ந்து முன் னெடுத்துச் சென்று முடிப்பதற்கு மாணவர் ஒருவ ருக்கு ரூ 2,000 முதல் ரூ 4,000 வரை அவர்களின் தேவைகளுக்கேற்ப அவசியமாக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்விக் கனக்சனால் (Kalvi Connections) சேகரிக்கப்பட்ட $ 60,000 நிதி கிளிநொச்சிக் கல்வி வளர்ச்சி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது, இந்த அறக்கட்டளையின் முக்கிய நோக்கம் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதரம் வரை கல்வி பயின்று முடித்தபின்னர் பல் கலைக் கழகங்களுக்கும் ஏனைய உயர் கல்வி வாய்ப்புள்ள நிறுவனங்களுக்கும் சென்று தமது உயர் கல்வியையும் தொழிற் கல்வியினையும் பெறுவதற்குப் போதிய கடனுதவியை வழங்குவதாகும். இந்த வாய்பினை ஏனைய வன்னி மாவட்டங்களுக்கும் விரிவாக்கும் அடிப்படை நோக்கம் கொண்டது இந்தத் திட்டம்.வங்கிகளின் கடனுதவிகளும் அரசாங்க நன்கொடைகளும் கிடைக்க வாய்ப்பின்றி எத்தனையோ மாணவர்கள் தமது படிப்பினைத் தொடர முடியாதவர்களாக இருக்கின்றனர். பணத்தினைக் காரணம் காட்டி எத்தனையே பெற்றார்கள் திறமைமிக்க மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லுவதனை இடைநிறுத்தி விடுகின்றனர். இத்தகைய நிலை எந்தவொரு மாணவனுக்கும் நிகழாது தடுப்பதது என்தே இன்றைய வன்னியின் தேவையாகும்



புலம் பெயர்ந்த உறவுகளுக்கும் தாயக உறவுகளுக்கும் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான அவசர வேண்டுகோள்

எமது தாயக மண் திட்டமிட்டுக் கபளீகரம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில்இதமிழ் மக்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் தமிழர்களின் தொகை குறைந்து வடக்கு கிழக்கில் மூன்றாந் தர பிரஜைகளாக்கப்படுகின்ற அபாயமும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கை யின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டு மல்லாது இலங்கையைத் தாயகமாகக் கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ் கின்ற ஒவ்வொரு தமிழர்களையும் சிந்தித்துச் செயற்பட வைக்கவேண்டிய ஒரு அவசரமான கால கட்டத்தில் வடக்கு கிழக்கின் பூர்வீகக் குடிகளான நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

வடக்கு கிழக்கு மக்களின் எண்ணிக் கையைக் குறைத்து தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையே சிதைத்து, எமது இனத் தையே சின்னாபின்னப்படுத்தத் துடிக்கின்றவர் களுக்கு நாமே வழி சமைத்துக் கொடுப்பது போல் எங்கள் ஒவ்வொருவரின் மௌனமும் சான்றாக இருக்கின்றது. அந்த நிலையை மாற்றி இது எங்கள் நாடு என்ற உணர்வுடன் உடனடியாகச் செயற்பட்டு, உங்கள் குடும்பத் தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு வரையும் வாக்காளராகப் பதிவு செய்து என்றோ ஒருநாள் வந்து இந்த மண்ணில் வாழ்வதற்காகவோ அல்லது விடுமுறையில் தங்கிச் செல்வதற்காகவோ, அல்லது வெளி நாட்டு நெருக்கடி மிகுந்த வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டதும் இங்கே நிம்மதியாக வாழ்ந்து சுதந்திரமாகப் பெருமூச்சு வீடுவதற்காகவோ உங்கள் வதிவிட உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு புலம் பெயர்ந்த உறவுகள் மற்றும் தாயக உறவுகள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் இன்னொரு நாட்டின் பிரஜா உரிமையைப் பெற்றிருந்தாலும் இலங்கையர் என்ற ரீதியில் இலங்கையின் வாக்காளர் பட்டியலில் உங்களதும்இ உங்கள் குடும்ப உறவுகள் ஒவ்வொருவரின் பெயரை யும் பதிவு செய்வதற்கு சட்டரீதியான உரிமை இருக்கின்றது என்பதை மறவாது விரைந்து செயற்படுமாறு அவசரமாக அழைக்கின்றேன்.

எமது தாயகத்தில் வாக்காளரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் ஏற்படும் பாதகமான பின்வரும் விளைவுகளைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின்றேன்:-

1. பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதால்இதமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை மேலும் குறைக்கப் படும். அதேவேளை அதிகளவிலான சிங்கள மக்கள் பரவலாகக் குடியேற்றம் செய்யப்பட்டு வரும் நிலையில் குறைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்றோ அல்லது இரண்டோ சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

2. இதனால் எமது பிரதேசங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படும்.இது எமது மக்களின் வாழ்வாதாரத்தையும், உட்கட்ட மைப்பு வசதிகளையும் மிக மோசமாகப் பாதிக்கும்.

3. சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டே பல்கலைக்கழகங்களுக்காக அனு மதிக்கப்படும் தமிழ் மாணவர்களின் எண்ணி க்கை தீர்மானிக்கப்படுவதால்இ அந்தத் தொகை மேலும் பல மடங்கு குறைக்கப்படலாம்.

4. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை யினூடாகப் புலமைப் பரிசிலைப் பெறுவதற்குத் தகுதியான தமிழ் மாணவர்களின் எண்ணிக் கையும் மக்கள் தெகை அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுவதால் புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்படம் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படும். நடை முறையில் பரீட்சைக்குத் தொற்றும் மாணவர் களில் 10% புலமைப்பரிசிலுக்காகத் தெரிவு செய்யபபட வேண்டுமென்ற நியதி இருந் தாலும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்த வீதத்திற்கு ஏற்ப தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை.

5. தமிழ் மக்கள் தொகை குறைந்து வரும்பொழுது கற்பதற்கான வயதெல்லை யுடைய தமிழ் மாணவர்களின் எண்ணிக் கையும் இயல்பாகவே வீழ்ச்சி அடைந்து வருவதால், தமிழ் மொழி மூல பாடசாலைகள் பல மூடப்படும் நிலை ஏற்படுவதால் பல கிலோ மீற்றர் தூரத்திற்கு ஒன்றாகப் பாடசாலைகள் மீள நிரணயிக்கப்படும். இது இருக்கின்ற மாணவர்களின் கற்கவேண்டுமென்ற ஆர்வத் தையும் குறைத்து பாடசலைக்குச் செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கையை உயர்த்தும். இது காலப் போக்கில் வசதி குறைந்த குடும்பங் களில் இருந்து எதிர் காலத்தில் கற்ற சமுதாயத் தையே காணமுடியாத ஒரு துர்பாக்கிய நிலை ஏற்படும்.

6. தமிழ் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள்இமற்றும் தமிழ் அரச ஊழியர் களுக்கான பதவி உயர்வுகள் போன்றன குறைக்கப்படும்.

7. பிரதேச அபிவிருத்திக்கான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படும்.

8. உள்ளூராட்சி அரசுகளாகச் செயற்பட்டுவரும் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு, உள்ளூராட்சி மன்றங் களின் எண்ணிக்கையும் குறைக் கப்படும். இது கிராமிய மட்டத்திலான மக்களாட்சிக்கான உரிமையையே இல்லாமல் செய்யும் ஒரு அபாயநிலையைத் தோற்றுவிக்கும்.

9. நிலத்திற்கான வாழ்விட உரிமையானது உங்கள் நகர சபையில் சோலை வரிகளைக் கட்டுவதன் மூலமும், அதே நிலத்துடன் பிணைக் கப்பட்ட முகவரியில் உங்கள் பெயர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள் வதன்மூலமும் உறுதிப்படுத்தப்படும். இவை தொடர்பான எந்தப் பதிவுகளும் உங்களால், இங்கே மேற் கொள்ளப்படாவிட்டால் உங்கள் நிலத்தை அரசு சுவீகரித்து தாம் விரும்பியவர் களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கை களை விரைந்து மேற்கொள்ளும். அதற்கான முன்னேற்பாடாகவே அரசாங்கம் காணிகள் மற்றும் ஆட்கள் அற்ற வீடுகள் போன்ற விபரங்களைத் திரட்டிவருகின்றது.என்றோ ஒருநாள் நீங்கள் தூங்கி விழிப்பதற்குள் உங்கள் வீடும்இநிலமும், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த உங்கள் மண்ணும் அன்னியனின் சொத்தாக மாறிவிடும்.

எனவே இன்னும் இவைபோன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் எங்களுடைய தமிழ் இனம்தள்ளப்படுகின்ற நிலையை மாற்றி அமைக்கும் சக்தி உங்களிடமே உள்ளது. இதற்கு நீங்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை கள் பின்வருமாறு:

உள்நாட்டில் வாழ்பவர்கள்

உள்நாட்டில் வாழ்பவர்கள் உடனடியாக உங்கள் பகுதி கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்டு வாக்காளர் பட்டியலைப் பெற்று அதில் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொரு வரின் பெயரையும் வெளிநாடகளில் வாழ்கின்ற உங்கள் ஏனைய குடும்ப ஊறுப்பினர்களின் பெயர்களையும் அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் அது இல்லாவிட்டால் மாத்திரம் கடவுட்சீட்டு இலக்கம் ஆகியவற்றையும் பதிந்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் கிராம சேவையாளரிடம் கையளித்து அதற்கான பிரதியையும் பெற்று வைத்துக் கொள்ளுங்கள்.

புலம்பெயர்ந்து வாழ்பவர்கள்

வெளிநாடுகளில் வேலை காரணமாகவோ அல்லது அகதிகளாகவோ அல்லது நிரந்தர வதிவிட சான்றிதழைப் பெற்றவர்களாகவோ அல்லது குடியுரிமை பெற்றவர்களாக எவரேனும் உங்கள் உறவுகள் இருந்து, இந்த மண்ணில் அவர்களது இரத்த உறவுகள் இல்லாவிடினும் இங்கே வாழ்கின்ற தூரத்து உறவுகளாக இருப்பினும் அல்லது அவர்களுடைய நண்பர் களாக இருப்பினும் அவர்களது விபரங்களைப் பெற்று அந்தந்த முகவரியில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கிராம சேவகர்களிடம் கையளிக்க விரைந்து செயற்படுங்கள்.



புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் உங்கள் முழுப் பெயர், இலங்கையில் உள்ள உங்களது முகவரி, தேசிய அடயாள அட்டை இலக்கம் அல்லாவிடில் கடவுச் சீட்டு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு தாய கத்தில் வாழ்கின்ற எவருக்காவது அனுப்பி அந்தத் தகவல்களை வாக்காளர் விண்ணப்பப் படிவத்தில் பதிவு செய்து உடனடியாக உங்கள் பகுதி கிராம சேவகர்களிடம் கையளிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதில் உங்களுடைய பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் ஒவ்வொருவரின் பெயர்களையும் கூடத் தவறாது குறிப்பிடுங்கள். இன்று நீங்கள் செய்யப்போகும் இந்தப் பேருதவி எதிர்காலத்தில் இந்த மண்ணில் வாழப்போகின்ற இன்றைய எமது குழந்தை களுக்குக் கிடைக்கப்போகும் மிகப் பெரிய வரமாகும்

இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு பிரஜையும் தம்மை வாக்காளர் களாகப் பதிவு செய்வது அவர்களின் அடிப்படை உரிமையாகும் என்பதைக் கவனத்தில் கொண்டு எமது மண்ணையும் மக்களையும் வரப்போகும் பேரழிவில் இருந்து காப்போம்.

நடராஜா அனந்தராஜ்
நகர பிதா,
வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்



சுப்பர் சிங்கர் மதுஷாவுடன் ஒரு நேர்காணல்!

பகிரதன் திருநாவுக்கரசு, பிரபாகினி பகிரதன் ஆகியோரின் மகள் மகிஷா பகிரதன் அவர்கள் அண்மையில் இந்திய தொலைக் காட்சியான விஜய் ரிவியின் சுப்பர் சிங்கர் ஜ/னியரில் பங்கேற்று முதல் பன்னிரண்டு பாடகர்களுள் ஒருவராக தனது புகழை நிலை நிறுத்தி கனடா திரும்பியுள்ளார். இவர் கனடா ரிவிஜ நாடாத்திய சுப்பர் ஸ்ரார் ஜூனியர் பருவம் ஒன்றின் வெற்றியாளர் என்பது குறிப்பிடத் தக்கது. இவருடனான செவ்வியினை இ-குருவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

கேள்வி: உங்களுக்கு எவ்வாறு சங்கீதம் கற்க வேண்டும் என ஆசை வந்தது?

மகிஷா: எனக்கு சினிமா பாட்டு என்றால் விருப்பம். அதனால் தான் சங்கீதத்தை கற்க தொடங்கினேன். (மகிஷாவின் அம்மா பிரபாகினி கூறுகையில்) சிறுவயதிலிருந்து மகிஷா பாட்டுகளை இராகத்துடன் பாடுவர் இதனால் எனது கணவரின் சகோதரியார் மகிஷாவைக் காணும் போதெல்லாம் பாடுமாறு கேட்கும் போது இவரும் ஆர்வத்துடன் பாடுவார், நாங்கள் இவருக்கு இரண்டரை வயதாக இருந்த போது இலங்கை சென்றிருந்தோம். அங்கே "பத்துக் குள்ளே நம்பர் ஒன்று சொல்லு" மிகவும் அழகாவும் தெளிவாகவும் பாடினார். அன்றிலிருந்து நாங்கள் தீர்மானித்தோம் இவருக்கு சங்கீதம் கற்பிக்க வேண்டும். பின்னர் இவருக்கு நான்கு வயதாக இருக்கும் போது சங்கீதா கோகுலம் அவர்களிடம் சங்கீதம் கற்பதற்கு சேர்த்துவிட்டோம் என தாயார் குறிப் பிட்டார். சங்கீத வகுப்புக்கு அனுப்ப மாட்டேன் எனச் சொல்லியே இவரை நிறைய விடயங் களை செய்ய வைத்திருக்கின்றேன். இவருக்கு எதனைச் சொல்லிக் கொடுத்தாலும் மிகவும் உன்னிப்பாக கவனித்து கற்றுக் கொள்வர் என இவரது ஆசிரியை குறிப்பிட்டாதாக பிரபாகினி எம்மிடம் தெரிவித்தார்.

கேள்வி: சுப்பர் ஸ்ரார் மற்றும் சுப்பர் சிங்கர் இரண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி இருக்கின் றீர்கள். இந்த இரண்டிலும் உங்கள் அனுபவம் எவ்வாறு இருந்தது.

மகிஷா: முதலில் நான் சுப்பர் ஸ்ரார் நிகழ்ச்சிக்கு செல்லும் போது எனக்கு மேடை பயமும் கூச்சமும் நிறைய இருந்தது. அத்துடன் எப்படி பாடப் போகின்றேன் என்று தெரியாது. அதனால் எனக்கு கொஞ்சம் நம்பிக்கை குறை வாக இருந்தது. ஆனால் நாங்கள் (சரிகா நவநாதனை குறிப்பிடுகின்றார். இவர் முதல் 23 பேரில் ஒருவராக சுப்பர் சிங்கர் யூனியரில் திகழ்ந்தவர். இவர் பாடிய ஈழத்தமிழ் மக்கள் பற்றிய பாடல் உலக தமிழர் அனைவரினதும் ஈர்த்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) இந்தியா செல்லும் போது நாங்கள் கூடுதலாக பாடல்களை கற்றுக் கொண்டு கூடுதலான தன்னம்பிக்கையுடன் சென்றோம். ரிவிஜ யின் சுப்பர் ஸ்ரார் நிகழ்ச்சியில் கரோக்கியில் தான் பாடினோம். அப்போது நான் இராகத்தோடு தான் பாடினேன் அதன் நுணுக்கங்கள் அவ்வளவாக தெரியாது. ஆனால் இந்தியாவுக்கு சென்ற போது தான் விளங்கியது ஒவ்வொரு பாடலையும் எவ்வாறு மிகவும் நுணுக்கமாக ஒவ்வொரு சொல்லையும் கவனித்து பாட வேண்டும் என்று.

கேள்வி: சுப்பர் ஸ்ரார் யூனியர் வெற்றியாள ராக கனடாவில் பலரினதும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் பெற்ற நீங்கள் இந்தியா வுக்கு செல்லும் போது என்ன மன நிலையில் சென்றுள்ளீர்கள்?

மகிஷா: இந்தியாவுக்குச் செல்ல முன்னர், எந்த பாடலையும் என்னால் பாட முடியும், எனக்கு போதிய தகுதி இருக்கின்றது என்ற பரிபூரண நம்பிக்கை என்னிடம் இருந்தது. அங்கு சென்ற வுடன் அங்குள்ள பாடகர்களின் திறமையைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு தயக்கம் ஏற்பட்டது, அவர்களுடன் போட்டிப் போட்டு பாடுவதற்காக மூன்று மாதம் கடுமையான பயிற்சிகளில் ஈடு பட்டேன். முதல் 20 போட்டியாளராக வரும் வரை எவருக்கும் அனந்த் வைத்திய நாதன் அவர் களின் பயிற்சி கிடைக்கவில்லை. எந்த பாடலை தெரிவு செய்ய வேண்டும் என்பதில் அவருடைய ஆலோசனை இருக்கும். "ஜோதிகா" பாடல் சுற்றில் எனது பாடலைக் கேட்டுவிட்டு, என்னு டைய பாடல் மிகவும் இனிமையாகவும் மெருகேறி இருப்பதாவும், எப்படி பயிற்சிகளை மேற்கொள்கிறாய் என அனந்த் வைத்தியநாதன் என்னை அழைத்து கேட்டறிந்து கொண்டார். அதன் பின்னர் நடுவர்கள் கூட எனது பாடல் களில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக கூறினார் கள். இவரது பயிற்சி தொடங்கிய பின்னர் தான் ஒரு பாடலை எப்படி கேட்க வேண்டும், அதி லுள்ள நுணுக்கங்களை எவ்வாறு உன்னிப்பாக கவனிக்க வேண்டும் போன்ற விடயங்களை என்னால் கற்க முடிந்தது. அவருடைய ஆலோ சனைகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு சுற்றிலும் அவரால் தேர்ந்தெடுக்கப்படும் போட்டி யாளருக்கு பயிற்சிகள் வழங்குவார். முக்கியமான விடயமாக தாயார் குறிப்பிடுகை யில், மகிஷா தற்போது தமிழில் கதைப்பதில் மிக முன்னேற்றத்தைக் காட்டுகின்றார் என்றார்.

கேள்வி: சினிமா பாடல்கள், கர்நாடக சங்கீதப் பாடல்கள் இவை இரண்டிலும் எந்த துறை உங்களுக்குப் பிடித்தமான துறை?

மகிஷா: எனக்குத் துறையிலும் விருப்பம் இருந்தாலும், எனக்கு சினிமாப் பாடல்களைத் தான் அதிகம் பாடப் பிடிக்கும். அத்துடன் எனது குரல் அமைப்பு மெல்லிசைக்கு ஏற்றது எனவும் கச்சேரி செய்வதற்கு ஏற்றது அல்ல, எனவே மெல்லிசை தான் தொடரும் படியும் அனந்த் வைத்தியநாதன் அறிவுரை வழங்கினார். அத்துடன் 18 வயதின் பின்னர் உனது மனம் மாறலாம் அந்த சந்தர்ப்பத்தில் உனக்கான துறை யை தேர்ந்தெடுக்க முடியும்

கேள்வி: கனடாவில் இருப்பவர்கள், இந்தியாவில் இருப்பவர்கள் இவர்களில் யார் உங்களது இசையை ரசிக்கிறார்கள்?



மகிஷா: இரண்டு நாடுகளும் இசையை இரசிக்கிறவர்கள் ஆனால் இந்தியாவில் இது கூடுதலாக இருக்கின்றது. உதாரணமாக, விதிகளில் செல்லும் போது பலர் இனம் கண்டு அருகில் வந்து ஆதரவாக கதைக்கிறார்கள். தங்கள் வீடுகளுக்கு வரச்சொல்லி அழைக் கிறார்கள். ஊக்கம் அளிக்கின்றார்கள். இது எனக்கு சந்தோசமாக இருக்கின்றது. இதனால் மேலும் என்னை கூடுதலாக பாட்டு கற்க வேண் டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்றது. ஆனால் இங்குள்ளவர்களுள் சிலர் ஊக்கம் அளிக்கின் றார்கள். ஆனால் பலர் மகிஷாவை இனம் கண்டாலும் அவர்களிடையே கதைப்பதற்கு கூச்சமும் தயக்கம் காரணமாக விலகிச் செல்கிறார்கள் (மகிஷாவின் தந்தையார் இதனைக் குறிப்பிட்டார்.

கேள்வி: இந்த எட்டு மாதக் காலத்தில் நீங்கள் உங்கள் கல்வியைத் தொடராமல் இந்த இசைப் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள் இதனால் உங்கள் கல்வி பாதிக்கப்படும் என நினைக்கிறீர்கள்?

மகிஷா: இல்லை, எனக்கு இசையைப் போல படிப்பிலும் ஆர்வம் இருக்கின்றது. எதிர் காலத்தில் நல்ல வழக்கறிஞராக வரவேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. இந்தியாவில் இருக் கும் போது ஆரம்பத்தில் இணைய தளத்தினூடாக எனது பாடசாலை செயன்முறை களை செய்தி அனுப்பினேன். பின்னர் போட்டி வலுவடைந்த பின்னர் என்னால் அதனை தொடரமுடியாமல் போய்விட்டது. ஆனாலும் நான் அடுத்த தரத்திற்கு உயர்த்தப்பட்டிருக் கின்றேன். நான் தவறவிட்ட பாடங்களை பாட்டைப் போல் தற்போது பிரத்தியேக வகுப் புகள் மூலம் ஈடு செய்து வருகின்றேன். இவரது இது பற்றித் தெரிவிக்கையில் சங்கீதத்தை ஒருமனதுபடுத்தி செய்வது போல எங்களது மகள் கல்வி துறையிலும் மிளிருவார் எனத் தெரிவித்தனர்.

கேள்வி: எதிர்காலத்தில் இசைதுறையில் என்ன செய்யலாம் என நினைக்கின்றீர்கள். அத்துடன் இங்குள்ள இசைத்துறை மாணவர் களுக்கு என்ன் சொல்ல விருப்புகின்றீர்கள்?

மகிஷா: எதிகாலத்தில் எனது பாடல் இசைத்தொகுப்பை வெளியிடுவதுடன் ஒரு சிறந்த பின்னணி பாடகராக வரவேண்டும். இந்தியா சென்று மீண்டும் பென்னி போன்ற ஆசிரியையிடம் கற்க வேண்டும். அனேகமாக எனக்கு விஜய் ரிவியில் மீள் பிரவேசம் இந்த பருவத்தில் வரலாம். இங்குள்ளவர்களுக்கு நான் நிச்சயமாக சொல்லவிருப்பது கூடுதலானவர்கள் எதிர்காலத்தில் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் அத்துடன் நிறைய பயிற்சிகளை சேர்வதற்காக செய்ய வேண்டும், இதில் பங்கு பற்றுவது நிறைய விடயங்களைக் கற்றுத்தரும்.



அபிநய சுந்தரன் ஆடல் அழகன் பஜன்குமார்

வீட்டில் ஒரே நெருக்குவாரம் தமிழ் கடைக்குப் போய் வரச் சொல்லித் தான். எதுக்கெண்டு கேக்காதைங்கோ எல்லாம் உந்த கறிவேப்பிலைக்குத் தான் வேற என்னத்துக்கு, அது வாங்கி வரவில்லை எண்டால் நல்ல சாப்பாடு இல்லை. என்ன பார்க்கிறீங்கள், இது ஆறெண்டுதானே, வேற யாருங்கோ எல்லாம் என்ர வீட்டுக் காரியின்ர பாட்டுத்தான்... சரி.. சரி.. உந்தா போட்டு வாரன் எண்டு சொல்லிக் கொண்டு பக்கத்திலுள்ள தமிழ் கடைக்கு வெளிக்கிட்டுக் கொண்டு வந்திட்டன்.

அங்க ஒரு போஸ்டரை பார்த்திட்டு, என்ன அண்ணை இப்ப வட இந்தியக் காரர்களும் இப்ப எங்கட கடவழிய ஃபிளயர் போடத்தொடங்கிட்டினம் என்று கேட்டேன். அதற்கு எதைய அண்ண சொல்லிறியள் என்று அவர் வினாவ..., அதத் தான், உந்த டான்ஸற்ர போஸ்ரரைத் தான் சொல்றன் என்றேன்.

அதுவோ.., இஞ்ச கனடாவில பிறந்த தமிழ் பொடியன்..., பவஜன் குமார் 20 வயது. சரியான கெட்டிக்காரன் அண்ணை, இந்தியாவில போய்யல்ல படிக்குது அண்ண..,

எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஊரில இருக்கிற எங்கட ஆக்களை விட இஞ்ச இருக்கிறவையள் ஒவ்வொருத்தரும் தங்கள் பிள்ளைகளை எதாவது ஒரு கலைக்கு அது அந்தப் பிள்ளைக்குப் பிடிக்குதோ இல்லையோ கொண்ட சேர்த்துப் போடிவினம். அதுவும் பொம்பிளப்பிள்ளை எண்டால் பரத நாட்டியம் இல்லையெண்டால் பாட்டு.., பொடியன் எண்டால் பாருங்கோ அது மிருதங்கம் தான். நான் உந்த வெஸ்டன் மியூசிக்கப் பற்றிச் சொல்லலை, அது வேற கதை. அப்படியிருக்கேக்கை உந்தப் பொடியன்ர தாய் தேப்பன் எப்படி இவன பரத நாட்டியம் பழக்கினவை?

நாங்கள் இதைப் பற்றிக் கதைத்துக் கொண்டு இருக்குப் போது உவன் சின்னவன் உள்ளே வந்து கொண்டிருந்தான். உண்மையில் அவன்ர பெயர் இராசேந்திரகுமார். ஆள்ளின்ர உயரத்தை வைச்சு நான் தான் உவனைச் சின்னவன் எண்டு கூப்பிடுகிறனான்.

உள்ள வந்தவன் எங்களைப் பார்த்து, என்ன.., இண்டைக்கு ரண்டு பேருக்கும் நல்லா... கத பொருத்திட்டுப் போல என்றான். அது ஒண்டுமில்லடாப்பா..., என்ன உந்த போஸ்ரரைப் பற்றி சும்மா கதைக்கிறம்.

ஓ.., பவஜன்ரையோ..,

உனக்கு இந்த பொடியனை முதல தெரியுமே, என்றேன். சரியாப் போச்சு என்று சொன்ன சின்னவன்.

உங்களுக்கு முதல சொல்லி இருக்கிறன் அண்ண, இந்தப் பொடியன் 14 வயதாக இருக்கும் போது அந்தப் பொடியன்ர அரங்கேற்றம் நடந்த போது, நீங்க மறந்திட்டியள் போல. திருஞானக்குமரன், சிறிரஞ்சனி அவையின்ர மூண்டு பிள்ளையளில மூத்த பொடியன் தான் பவஜன். "மழைத் துளி மழைத் துளி மண்ணில் சங்கமம்" எண்ட பாட்டுக்கு சின்னனில நல்ல ஆடுவான். எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம் இருக்கின்றது. நான் நினைக்கிறன் நாலு அச்சு வயது இருக்கும் எண்டு. உதுவல பார்த்திட்டு, பவஜன்ர அப்பம்மா தான் இவனை பத்மினி ஆனந்தன் ரீச்சரிட்டை கொண்டே சேர்த்துவிட்டவா. அதற்குப் பிறகு வாசு சின்னராசாவிட்டையும் நடனம் பழகி இருக்கிறான்.

இதற்கிடையில் யாரோ கடியக்குள் நுழைய, எங்கள் பேச்சு தடைப்பட்டது, வாங்கோ என்றார் இராசு அண்ணை. என்ன பார்க்கிறிங்கள்... யார் இந்த இராசு அண்ணை எண்டு தானே. ஓ நீங்க நினைப்பியள் புதிதாக உள்ளே வந்தவர் எண்டு.., மன்னிக்கவும், நான் முதல சொல்ல மறந்திட்டன். அது அவரில்லை இது எங்க கடை முதலாளி தான். ஒரு காலத்தில இராசு அண்ணைக்கு எங்கட கதயக் கேக்க நேரமில்ல ஆனால் இப்ப எல்லா இடமும் நிறைய புதிய பெரிய கடைகள் வந்த தால இராசு முதலாளி போன்றவையின்ர யாவாரம் படுத்திட்டுது. அதால மனுசன் எங்கட அறுவை எல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கும்.

இஞ்ச பாருங்க அண்ண, இவன் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல், சாயி பாபாவுக்கு முன்னாலே எல்லாம் ஆடி பாராட்டு பெற்றது மட்டுமல்லாது ஜெயா ரீவி நடந்த "தகதிமிதா" நடனப் போட்டியில முதல் பரிசு அண்ண வெண்டவன்.. என்றான் சின்னவன். ஓ.. அப்படியேடா தம்பி எனக்கு இது தெரியாதடா. எங்கட பொடியன் இப்படி எல்லாம் சாதிச்சிட்டு வந்திருக்கிறான். ஆப்பிளைப் பிள்ளை டான்ஸ் ஆடுது எண்டால் ஒரு மாதிரி பார்க்கிற எங்கட சமூகத்தில இந்த பொடியன்ர தாய் தேப்பனை கண்டிப்பாக பாராட்ட தான்டா வேனும் என்று எங்களுடன் கலந்து கொண்டார் இராசு முதலாளி.

போங்க அண்ண, முதலில நடனம் பழக போகக்கை எத்தனை பேர் இவையல குழப்பியிருக்கினம் எண்டுவீட்டில் ஒரே நெருக்குவாரம் தமிழ் கடைக்குப் போய் வரச் சொல்லித் தான். எதுக்கெண்டு கேக்காதைங்கோ எல்லாம் உந்த கறிவேப்பிலைக்குத் தான் வேற என்னத்துக்கு, அது வாங்கி வரவில்லை எண்டால் நல்ல சாப்பாடு இல்லை. என்ன பார்க்கிறீங்கள், இது ஆறெண்டுதானே, வேற யாருங்கோ எல்லாம் என்ர வீட்டுக் காரியின்ர பாட்டுத்தான்... சரி.. சரி.. உந்தா போட்டு வாரன் எண்டு சொல்லிக் கொண்டு பக்கத்திலுள்ள தமிழ் கடைக்கு வெளிக்கிட்டுக் கொண்டு வந்திட்டன்.

அங்க ஒரு போஸ்டரை பார்த்திட்டு, என்ன அண்ணை இப்ப வட இந்தியக் காரர்களும் இப்ப எங்கட கடவழிய ஃபிளயர் போடத்தொடங்கிட்டினம் என்று கேட்டேன். அதற்கு எதைய அண்ண சொல்லிறியள் என்று அவர் வினாவ..., அதத் தான், உந்த டான்ஸற்ர போஸ்ரரைத் தான் சொல்றன் என்றேன்.

அதுவோ.., இஞ்ச கனடாவில பிறந்த தமிழ் பொடியன்..., பவஜன் குமார் 20 வயது. சரியான கெட்டிக்காரன் அண்ணை, இந்தியாவில போய்யல்ல படிக்குது அண்ண..,

எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. ஊரில இருக்கிற எங்கட ஆக்களை விட இஞ்ச இருக்கிறவையள் ஒவ்வொருத்தரும் தங்கள் பிள்ளைகளை எதாவது ஒரு கலைக்கு அது அந்தப் பிள்ளைக்குப் பிடிக்குதோ இல்லையோ கொண்ட சேர்த்துப் போடிவினம். அதுவும் பொம்பிளப்பிள்ளை எண்டால் பரத நாட்டியம் இல்லையெண்டால் பாட்டு.., பொடியன் எண்டால் பாருங்கோ அது மிருதங்கம் தான். நான் உந்த வெஸ்டன் மியூசிக்கப் பற்றிச் சொல்லலை, அது வேற கதை. அப்படியிருக்கேக்கை உந்தப் பொடியன்ர தாய் தேப்பன் எப்படி இவன பரத நாட்டியம் பழக்கினவை?

நாங்கள் இதைப் பற்றிக் கதைத்துக் கொண்டு இருக்குப் போது உவன் சின்னவன் உள்ளே வந்து கொண்டிருந்தான். உண்மையில் அவன்ர பெயர் இராசேந்திரகுமார். ஆள்ளின்ர உயரத்தை வைச்சு நான் தான் உவனைச் சின்னவன் எண்டு கூப்பிடுகிறனான்.

உள்ள வந்தவன் எங்களைப் பார்த்து, என்ன.., இண்டைக்கு ரண்டு பேருக்கும் நல்லா... கத பொருத்திட்டுப் போல என்றான். அது ஒண்டுமில்லடாப்பா..., என்ன உந்த போஸ்ரரைப் பற்றி சும்மா கதைக்கிறம்.

ஓ.., பவஜன்ரையோ..,

உனக்கு இந்த பொடியனை முதல தெரியுமே, என்றேன். சரியாப் போச்சு என்று சொன்ன சின்னவன்.

உங்களுக்கு முதல சொல்லி இருக்கிறன் அண்ண, இந்தப் பொடியன் 14 வயதாக இருக்கும் போது அந்தப் பொடியன்ர அரங்கேற்றம் நடந்த போது, நீங்க மறந்திட்டியள் போல. திருஞானக்குமரன், சிறிரஞ்சனி அவையின்ர மூண்டு பிள்ளையளில மூத்த பொடியன் தான் பவஜன். "மழைத் துளி மழைத் துளி மண்ணில் சங்கமம்" எண்ட பாட்டுக்கு சின்னனில நல்ல ஆடுவான். எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம் இருக்கின்றது. நான் நினைக்கிறன் நாலு அச்சு வயது இருக்கும் எண்டு. உதுவல பார்த்திட்டு, பவஜன்ர அப்பம்மா தான் இவனை பத்மினி ஆனந்தன் ரீச்சரிட்டை கொண்டே சேர்த்துவிட்டவா. அதற்குப் பிறகு வாசு சின்னராசாவிட்டையும் நடனம் பழகி இருக்கிறான்.

இதற்கிடையில் யாரோ கடியக்குள் நுழைய, எங்கள் பேச்சு தடைப்பட்டது, வாங்கோ என்றார் இராசு அண்ணை. என்ன பார்க்கிறிங்கள்... யார் இந்த இராசு அண்ணை எண்டு தானே. ஓ நீங்க நினைப்பியள் புதிதாக உள்ளே வந்தவர் எண்டு.., மன்னிக்கவும், நான் முதல சொல்ல மறந்திட்டன். அது அவரில்லை இது எங்க கடை முதலாளி தான். ஒரு காலத்தில இராசு அண்ணைக்கு எங்கட கதயக் கேக்க நேரமில்ல ஆனால் இப்ப எல்லா இடமும் நிறைய புதிய பெரிய கடைகள் வந்த தால இராசு முதலாளி போன்றவையின்ர யாவாரம் படுத்திட்டுது. அதால மனுசன் எங்கட அறுவை எல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கும்.

இஞ்ச பாருங்க அண்ண, இவன் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல், சாயி பாபாவுக்கு முன்னாலே எல்லாம் ஆடி பாராட்டு பெற்றது மட்டுமல்லாது ஜெயா ரீவி நடந்த "தகதிமிதா" நடனப் போட்டியில முதல் பரிசு அண்ண வெண்டவன்.. என்றான் சின்னவன்.

ஓ.. அப்படியேடா தம்பி எனக்கு இது தெரியாதடா. எங்கட பொடியன் இப்படி எல்லாம் சாதிச்சிட்டு வந்திருக்கிறான். ஆப்பிளைப் பிள்ளை டான்ஸ் ஆடுது எண்டால் ஒரு மாதிரி பார்க்கிற எங்கட சமூகத்தில இந்த பொடியன்ர தாய் தேப்பனை கண்டிப்பாக பாராட்ட தான்டா வேனும் என்று எங்களுடன் கலந்து கொண்டார் இராசு முதலாளி.

போங்க அண்ண, முதலில நடனம் பழக போகக்கை எத்தனை பேர் இவையல குழப்பியிருக்கினம் எண்டு தெரியுமே. பழக விடுகிறியள் பொடியன் பொம்பிளப்பிள்ளை மாதிரி வரப் போகிறான். இருந்தாலும், பவஜன்ர ஊக்கமும் ஆர்வமும் பரத நாட்டியத்தை கடவுளாக மதிச்சதால இண்டைக்கு மூண்டு வருஷத்துக்கு முன்னால இந்தியாவுக்கு போய் நல்லா கலையை கற்று வந்திருக்கிறான் என்ற சின்னவன்.

பத்மா சுப்ரமணியம், அம்பிகா பச், சுதாராணி ரகுமதி, சிறிமதி ராதா, ஷிஜித் நம்பியார் போனற பிரபல நடன கலைஞர்களுடனும் நடனம் ஆடியிருப்பதுடன் அவர்களிடமிருந்து நடனம் கற்று தனக்கே உரிய பாணியில் மெருகேற்றி சிறப்பாக ஆடிவருகிறான் அண்ண, எண்டு சொன்னது மட்டுமல்ல, அமெரிக்காவில நடந்த வலுவூர் இராமையா விருதுக்கான நடனப் போட்டியில வெண்டிருக்கிறான் என்றான் சின்னவன்.

பவஜனின் சிறப்புக்களை கேட்க எனக்கு ஆச்சரியமாகவும் பெருமையாகவும் இருந்தது. சின்னவனிடம் கேட்டேன். உந்த ஏதாவது படிக்கிறானா எண்டு.

ஓம் அண்ணை.., இஞ்ச நாலைஞ்சு யூனிவேசிட்டியில பிசினசில கிடைச்சதாம், பொடியன் இந்தியாவில போய் பரத நாட்டியம் படிக்க வேனும் எண்டு விடாபிடியாக நிண்டு அங்க சென்னையில் டான்சும் ஏதோ விசுவல் பேசிக்கும் படிக்கிறானாம். ஆனால் இவனுக்கு நாட்டியம் தானண்ணை உசிர் என்ற சின்னவன் சொன்னான் பவஜன் தன்ர குருவின் நடன பள்ளியின் கிளை ஒன்றை இஞ்ச நிறுவி அதில எல்லாருக்கும் நாட்டியம் சொல்லிக் கொடுப்பதோடு எங்கட கலாச்சார பண்பாடு செறிந்த புராணங்கள், வேதங்களை எங்கட இளம் சந்ததி தெரிந்து கொள்ள வேனும் எண்டும் அவையள இந்தியாவுக்கு கலையில் மேல் படிப்புக்கு அனுப்ப வேனும் என்பது தான் தன்ர எதிர்காலக் கனவு என்று சொல்றான். அதுமட்டுமல்ல அண்ணை சென்னை சத்தமும் அசுத்தமும் நிறஞ்சு இருந்தாலும் அங்குள்ள மக்கள் தூய்மையான உள்ளத்துடன் வாழ்கிறார்கள் பழகுகிறார்கள் நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என உணர்ச்சி வசப்பட்டு சொல்றான் அண்ணை என்று சின்னவன் கூறுகையில் என்ர் போன் மணி அலறத் தொடங்கியது.

அட வந்த விசயத்தை மறந்திட்டன் தம்பி வீட்டுக்காரி போன் அடிக்குது. பவஜன்ர புரோகிறமுக்கு எனக்கும் ஒரு ரிக்கேற் எடுக்க மறந்திடாதே. அப்ப நான் வாறன் இந்த கறிவேப்பிலயைக் முதலில குடுக்கனும் பேந்து ஒரு நாளைக்கு சந்திப்போம்தெரியுமே. பழக விடுகிறியள் பொடியன் பொம்பிளப்பிள்ளை மாதிரி வரப் போகிறான். இருந்தாலும், பவஜன்ர ஊக்கமும் ஆர்வமும் பரத நாட்டியத்தை கடவுளாக மதிச்சதால இண்டைக்கு மூண்டு வருஷத்துக்கு முன்னால இந்தியாவுக்கு போய் நல்லா கலையை கற்று வந்திருக்கிறான் என்ற சின்னவன்.

பத்மா சுப்ரமணியம், அம்பிகா பச், சுதாராணி ரகுமதி, சிறிமதி ராதா, ஷிஜித் நம்பியார் போனற பிரபல நடன கலைஞர்களுடனும் நடனம் ஆடியிருப்பதுடன் அவர்களிடமிருந்து நடனம் கற்று தனக்கே உரிய பாணியில் மெருகேற்றி சிறப்பாக ஆடிவருகிறான் அண்ண, எண்டு சொன்னது மட்டுமல்ல, அமெரிக்காவில நடந்த வலுவூர் இராமையா விருதுக்கான நடனப் போட்டியில வெண்டிருக்கிறான் என்றான் சின்னவன்.

பவஜனின் சிறப்புக்களை கேட்க எனக்கு ஆச்சரியமாகவும் பெருமையாகவும் இருந்தது. சின்னவனிடம் கேட்டேன். உந்த ஏதாவது படிக்கிறானா எண்டு.

ஓம் அண்ணை.., இஞ்ச நாலைஞ்சு யூனிவேசிட்டியில பிசினசில கிடைச்சதாம், பொடியன் இந்தியாவில போய் பரத நாட்டியம் படிக்க வேனும் எண்டு விடாபிடியாக நிண்டு அங்க சென்னையில் டான்சும் ஏதோ விசுவல் பேசிக்கும் படிக்கிறானாம். ஆனால் இவனுக்கு நாட்டியம் தானண்ணை உசிர் என்ற சின்னவன் சொன்னான் பவஜன் தன்ர குருவின் நடன பள்ளியின் கிளை ஒன்றை இஞ்ச நிறுவி அதில எல்லாருக்கும் நாட்டியம் சொல்லிக் கொடுப்பதோடு எங்கட கலாச்சார பண்பாடு செறிந்த புராணங்கள், வேதங்களை எங்கட இளம் சந்ததி தெரிந்து கொள்ள வேனும் எண்டும் அவையள இந்தியாவுக்கு கலையில் மேல் படிப்புக்கு அனுப்ப வேனும் என்பது தான் தன்ர எதிர்காலக் கனவு என்று சொல்றான். அதுமட்டுமல்ல அண்ணை சென்னை சத்தமும் அசுத்தமும் நிறஞ்சு இருந்தாலும் அங்குள்ள மக்கள் தூய்மையான உள்ளத்துடன் வாழ்கிறார்கள் பழகுகிறார்கள் நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என உணர்ச்சி வசப்பட்டு சொல்றான் அண்ணை என்று சின்னவன் கூறுகையில் என்ர் போன் மணி அலறத் தொடங்கியது.

அட வந்த விசயத்தை மறந்திட்டன் தம்பி வீட்டுக்காரி போன் அடிக்குது. பவஜன்ர புரோகிறமுக்கு எனக்கும் ஒரு ரிக்கேற் எடுக்க மறந்திடாதே. அப்ப நான் வாறன் இந்த கறிவேப்பிலயைக் முதலில குடுக்கனும் பேந்து ஒரு நாளைக்கு சந்திப்போம்.



வீடு வாடகைக்கு விடுவோர் குளிர்சாதன உபகரணங்களைப் பொருத்துவது கட்டாயமாக்கப்படுமா ? - ரொறொன்ரோ மாநகர சபை பரிசீலனை

ரொறொன்ரோவில் வீடுகள் வாடகைக்கு விடப்படும் போது குளிர்சாதன வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்ற புதிய கோரிக்கை சமீப காலமாகவே அதிகரித்து வருவதால் இது குறித்து ரொறொன்ரோ மாநகர சபை மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. ஜோஷ் மட்லா என்ற நகர சபைத் தலைவர் இது தொடர்பான தீர்மானம் ஒன்றை அவையில் கொண்டு வந்தார். அதன் பின்னர் ரொறொன்ரோ மாநகர சபை சார்பில் இரு முக்கிய உத்தரவுகள் நகரசபைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதலாவதாக வாடகைக்கு விடும் வீடுகளின் உரிமையாளர்கள் செப்ரெம்பர் 15 முதல் யூன் 1 வரை வீடுகளில் வெப்பமூட்டும் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமாகிறது. புற வெப்பநிலை எதுவாக இருப்பினும் இந்த விடயத்தில் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படாது. இரண்டாவதாக அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அறை வெப்பநிலை சட்டமாக்கப்பட வேண்டுமா என்பதையும் ஆராயும் படி மாநகர சபை ஊழியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

புதியதாக நகரசபைத் தலைவர் கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் கோடைக்காலங்களில் குளிரூட்டும் வசதி மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக உள்ளதும் , இது ஒரு வாழக்கைத்தர விடயமாகவும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால் இதற்கு மாநகர அவை முக்கியத்துவம் தர வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் குளிரூட்டும் வசதி செய்து கொடுப்பதை மாநகர அரசு கட்டாயமாக்கக் கூடாது. அதனால் சில வீட்டு உரிமையாளர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாக நேரும் எனவும் சிலர் வாதிட்டுள்ளதை தொடர்ந்து இந்த விடயத்தில் முடிவேதும் இதுவரை ஏற்படவில்லை.

வங்கிகள் மீது மக்கள் புகாரளிக்க எதுவாக புதிய நடைமுறை - நிதியமைச்சர் ஜிம் ப்ளஹெர்ட்டி அறிவிப்பு

கனாடாவில் உள்ள வங்கிகளில் தங்களுக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்களையும், வங்கிகள குறித்த புகார்களையும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறுவதற்கு புதிய திட்டத்தினை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளதாக நிதியமைச்சர் ஜிம் ப்ளஹெர்ட்டி அறிவித்துள்ளார். வங்கிகள் குறித்த வாடிக்கையாளர்களின் புகார்களை பாரபட்சமின்றி உடனடியாகத் தீர்க்கவும், அனைத்தையும் வெளிப்படைத் தன்மைக்கு கொண்டு வரும் நோக்கிலுமே புதிய விதிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

புதிய விதிமுறைகளின் படி தங்கள் வங்கிகள் மீதான சச்சரவுகளை முடிவுக்கு கொண்டு வருவதில் வாடிக்கையாளர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். இதற்காக அதிகப்படியான தனிப்பட்ட நுகர்வோர் புகார்த் திட்டங்களை கொண்டு வருவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

அதேபோன்று வாடிக்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்றே வங்கிகளுக்கும் புதிய நடைமுறைகள் சில உருவாக்கப்படும். இதில் வங்கிகள் விரும்பினால் பிரதிநிதிகளாகவும் அல்லது தங்கள் வங்கி சார்பாக புற அறிவுறுத்தல் குழு ஒன்றையும் அமைத்து அதன் மூலம் வாடிக்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இந்தக் குழுவினை சம்பந்தப்பட்ட வங்கிகளே தெரிவு செய்து கொள்ளலாம். அதே நேரத்தில் வங்கிகளால் அமைக்கப்படும் குழு அடக்கு முறைகளை மக்கள் மீது திணிக்கவோ, வங்கி விதிமுறைகளுக்கு மாற்றாகவோ செயல்படக் கூடாது எனவும் அமைச்சர் கூறினார். இந்தக் குழுக்கள் அனைத்தும் நுகர்வோர் நிதி முகமையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட உள்ளது.

ஒட்டவாவில் பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை மீறுவோருக்கு $305 அபராதம்




இந்த வருடம் தலைநகர் ஒட்டவாவில் நடைபெற்ற கனடா தினக் கொண்டாட்டங்களுக்குப் பின்னர் புகை பிடிப்போரை தண்டிக்கும் வகையில் பல புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எதிர்வரும் திங்கள்கிழமை முதல் இந்தத் தடையை கடுமையாக அமுல்படுத்தவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. ஒட்டவாவில் பொது மக்கள் கூடும் இடங்களான பூங்கா , கடற்கரை, மது அருந்தும் கடைகளின் பின் திண்ணை உள்ளிட்ட ஒட்டவா நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் எங்குமே புகை பிடிக்கக் கூடாது. மீறினால் கூ305 அபராதமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

உள்ளரங்குகளில் புகை பிடித்தாலும் அதுவும் பிறரை பாதிக்கும் வகையில் இருக்கக கூடாது என்ற புதிய கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் உள்ளரங்குகளில் புகை பிடிப்பதை விட வெளி இடங்களில் புகை பிடித்தால் அதிக பாதிப்பு இருக்காது என கூறப்படுவதை இந்த சட்டங்கள் கடுமையாக மறுத்துள்ளதுடன், எங்கு சிகரெட் பற்ற வைத்தாலும் அது அருகில் உள்ளவர்களுக்கு ஒரே மாதிரியான பாதிப்பையே ஏற்படுத்துகிறது என்பதால் கடுமையான தடை நடைமுறைக்கு கொண்டு வரப்படும் எனவும் அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன.

இது போன்ற தடையைக் கொண்டு வரும் முதல் நகரம் அல்ல ஒட்டவா. சமீப காலமாகவே பொது இடங்களில் புகை பிடிப்பதற்கான தடை சட்டங்கள் வன்குவர் , நியூயோர்க் உள்ளிட்ட நகரங்களில் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அடமானக் கடன்களுக்கு கடுமையாக்கப்பட்ட புதிய விதிமுறைகள்



5% INTEREST RATE	Before July 9	After July 9
Amortization	30 years	25 years
Monthly payment	$2,004.57	$2,184.54
Total interest cost	$346,039.79	$279,756.22
Refinancing limit	85 %	80 %

வீடுகள் அடமானத்தின் பேரில் வாங்கப்படும் கடன்கள் அதிகரித்து வருவதையும் இதனால் கனடிய வீடுகளின் விலை உச்சத்தில் இருப்பதையும் கட்டுப்படுத்தும் பொருட்டு அடமானக் கடன்களுக்கான புதிய விதிமுறைகளை கடந்த மாதம் நிதியமைச்சர் ஜிம் பிளஹெர்ட்டி அறிவித்திருந்தார். புதிய விதிமுறைகள் யூலை 9 முதல் நடைமுறைக்கு வரத் தொடங்கியுள்ளது.

புதிய விதிமுறைகளின் படி அடமானங்களுக்கான கால கட்ட உச்ச வரம்பு 5 ஆண்டுகள் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இனி வீட்டு அடமானத்தின் பேரில் வங்கியில் கடன் வாங்குபவர்கள் முன்பு இருந்ததை விட அதிகப்படியான மாதந்த தவணையை கட்ட வேண்டியிருக்கும்.

அடமானங்களின் பேரில் இதற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த மறுநிதியும் 85 சதவீதத்திலிருந்து, 80 சதவீதமாகக் குறைக்கபப்ட்டுள்ளது. எனவே இனி அடமானச் சொத்தின் மதிப்பில் 80 சதவீதத்தினை மட்டுமே கடனாக பெற முடியும். உதாரணமாக $1 மில்லியன் மதிப்புள்ள சொத்தினை வாங்க விரும்புபவர்கள் உடனடித் தொகையாக குறைந்த பட்சம் $200,000. செலுத்தினால் மட்டுமே அந்த சொத்தை வாங்க முடியும். மேலும் தவணைக் காலகட்டங்களும் குறைக்கப்பட்டுள்ளதால் அதிகப்படியான தொகையை மாதாமாதம் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

இது போன்ற கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளதன் மூலம் போட்டி போட்டுக் கொண்டு அதிகப்படியான விலைக்கு வீடுகளை வாங்குபவர்கள் குறைந்து விடுவார்கள் என்பதால் தற்போது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள கனடிய வீட்டுச் சந்தை விவகாரங்கள் சுமூக முடிவுக்கு வருவதோடு நாட்டின் பொருளாதாரமும் பாதுகாக்கப்படும் என அரசு எண்ணுகிறது. ஆனால் அரசு அறிவித்துள்ள புதிய மாற்றங்கள் குறித்த விபரங்கள் நாட்டு மக்கள் பெரும்பான்மையானோரை சென்று சேரவே இல்லை என ஆதங்கப்படுகின்றன கனடாவின் பிரபல வங்கிகள்.

புகலிடம் கோரி தஞ்சமடைந்துள்ளோருக்கு விரிவான மருத்துவ திட்டங்கள் கிடையாது அரசின் அறிவிப்பிற்கு ஜேசன் கென்னி ஆதரவு

புகலிடம் கோரி தஞ்சமடையும் அகதி மக்களுக்கு விரிவான மருத்துவ திட்டங்கள் எதுவும் கிடையாது என்ற கொன்சவேற்றிவ் அரசினை முடிவினை குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி ஆதரித்துள்ளார். அரசின் இடைக்கால சுகாதாரத் திட்டங்களின் கீழ் அகதி மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த விரிவான நலத் திட்டங்கள் எதனையும் இனி வழங்க வேண்டிய அவசியமில்லை என்றும் இன்றுடன் அவை நிறுத்தப்பட்டு விட்டதாகவும் கென்னி பாராளுமன்றில் பேசியுள்ளார்.

இனி அகதி மக்களுக்கு அவசர காலச் சேவைகளும் இ கனடிய மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஏதேனும் நோய் ஏற்பட்டால் அவற்றை குணப்படுத்தவும் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார். முன்னதாக இந்த திட்டத்தினை கனடிய அரசு அறிவித்த வேளையில் இத்திட்டம் குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஒன்றாரியோ சுகாதார அமைச்சு டேப் மாத்தியூஸ் கோரிக்கையோன்றினை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் ஜேசன் கென்னி, புகலிடம் கோரி தஞ்சமடைந்துள்ள அகதி மக்களுக்கு அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னரும் கனடிய மக்களுக்கு நிகராக சிறப்பு சிகிச்சைகளான கண், பல் வைத்தியங்களைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என மாநில அரசுகள் கோரிக்கை விடுப்பது ஏன் என தனக்குப் புரியவில்லை என்றும் கூறியுள்ளார். தற்போதைய நிலையில் கனடிய மக்களை விட சிறந்த மருத்துவத் திட்டங்களையே அகதி மக்கள் பலர் அனுபவித்து வருகின்றனர் எனவும் கென்னி கூறினார்.

Publisher : Navajeevan Anantharaj
புதிப்பாளர்: நவஜீவன் அனந்தராஜ்
Editor: Santhan Ratnam, Navajeevan Anantharaj
ஆசிரியர்: சாந்தன் இரத்தினம், நவஜீவன் அனந்தராஜ்
Photography: Selvams Photos, Karuna, Gana Arumugam, and Thushi
புகைப்படம்: திருச்செல்வம், கருணா, கணா ஆறுமுகம், துசி
Typing: Santhan, Veni
தட்டச்சு: சாந்தன் இரத்தினம், வேணி
Layout : Kannan Apex Creations
Marketing: Navajeevan
விளம்பரம் சந்தைப் படுத்தல்: நவஜீவன்
Tel : 416-272-8543 Web : www.ekuruvi.com Email : info@ekuruvi.com


Kiruba @ 416 841 6513
Cinematic Photography & Videography
Shakthy Studio
THE DREAMS FACTORY
உங்கள் வாழ்வின் இனிய நிகழ்வுகளில்
எம்முடன் இணைந்திருங்கள்.
www.shakthystudio.com, Facebook : Shakthy hub


Residential | Commercial | Refinance
மோட்கேஜ் தேவைகளுக்கும்...
உங்கள் இலக்கு வெல்ல...
நாம் துணை நிற்போம்
First Time Buyers
2nd Mortgages
Refinancing
Self Employed
Pre Approval
Bad Credit
Debt Consolidation
Non-Verifiable Income
New immigrant
Kumaran Arasaratnam
Mortgage Agent
416.671.8160
RMA
REAL MORTGAGE ASSOCIATES
Lic #M10002705
FSCO #10464

www.ekuruvi.com

e குருவி

சிறகு - 01 | 15.07.2012 | பறப்பு -02